# செம்மண்

நிலம் 1 துகள் 38 வள்ளுவர் ஆண்டு 2052, 03 - 09 சித்திரை 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# அதிகாரப் பகிர்வு பிரிவினைக்கான முன்னெடுப்பா?



■ சடகோபன் ராஜூ ■

இனப்பிரச்சினைக்கான தீர்வாக பகிரப்பட்ட இறைமை அடிப்படையிலான அதிகாரப் பகிர்வே தீர்வு என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தமிழ்த் தேசத்தை அங்கீகரித்து இலங்கை என்பது இரு தேசங்களின் நாடு என்ற அடிப்படையில் தீர்வு வேண்டும் என்கிறது தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்கிற அதிகாரப் பகிர்வே தனது இலக்கு என்கிறது ஆளும் தரப்பில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி). ஆனால் இப்படி தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தும் அதிகாரப் பகிர்வு என்பதே பிரிவினைதான் என்கிறார் இலங்கையின் அதிபர் கோட்டாபய ராஜபக்ச. கிராமங்களில் மக்களைச் சந்திக்கும் அவரது திட்டத்தின் கீழ் கடந்த வார இறுதியில் மாத்தறை மாவட்டக் கிராமம் ஒன்றில் அவர் உரையாற்றும்போது அதிகாரப் பகிர்வு என்கிற பெயரில் பிரிவினையை ஊக்குவிக்கும் திட்டத்தை ஏற்கமாட்டோம் என்றார். இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்கிற பெயரில் பிரிவினையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது புவிசார் நலன்களை மற்றைய நாடுகள் அடைய முயற்சிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றார் அவர்.

**"2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தச் சந்தர்ப்பத்தில் தீர்வு குறித்துப் பேசினாலும் ''பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத இலங்கைக்குள் தீர்வு'' என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறி வருகின்றார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# மாற்றமில்லாத துயரம்

2015ஆம் ஆண்டு ராஜபக்சக்கள் பதவியை இழந்ததைத் தொடர்ந்து அவர்கள் மக்கள் முன் வந்தபோது தமது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த தவறுகள் மீண்டும் நிகழாது என்று மீண்டும் மீண்டும் கூறினார்கள். 2019 தேர்தல் களத்திலும் இந்தச் சுய மன்னிப்புக் கோரல் குரல் ஓங்கி ஒலித்தது. ஆனால், ராஜபக்சக்கள் தங்கள் முதலாவது ஆட்சியின் மீது மக்கள் கொண்ட கோபத்தில் இருந்து பாடம் படித்தார்களா, உண்மையிலேயே தாம் விட்ட தவறுகளுக்காக அவர்கள் வருந்தினார்களா? இந்தக் கேள்விகளுக்கான பதில் இல்லை என்பதாகத்தான் இப்போது இருகின்றது.

2015இல் அவர்கள் ஆட்சியை இழந்தபோது அவர்களுக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டுக்களில் முக்கியமானவை, ஒரு குடும்பமே ஒட்டுமொத்த ஆட்சியையும் கட்டுப்படுத்துகின்றது, ஊழல், ஊடகங்கள் மீதான அடக்குமுறை, பொது நிர்வாகத்திற்குள் படைத் துறையினரைக் களமிறக்கி நாட்டைப் படைத்துறை ஆட்சியை நோக்கி நகர்த்துவது, சுற்றுச்சூழலைப் பாதிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவான போக்கு என்று பட்டியலிட்டுக்கொண்டு போகலாம். மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தபோது இந்த விடயங்களில் இருந்து ராஜபக்சக்கள் விலகி நடக்க முற்படுவார்கள், கடந்த காலப் படிப்பினைகளை மனங்கொள்வார்கள் என்கிற எதிர் பார்ப்பு இருந்தது.

ஆனால் அண்மைக் காலங்களாக வெளியாகும் செய்திகள் அனைத்துமே கடந்த கால அனுபவத்திலிருந்து ராஜபக்சக்கள் படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றன. குடும்ப ஆதிக்கம் ஆட்சிக்குள் அதிகரித்திருப்பதை அடுத்து ஆளும் தரப்புக் குள்ளேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது. இப்போது ஆட்சி யில் நேரடியாக பங்கெடுக்காமல் வெளியே இருக்கும் பசில் ராஜபக்ச அதிகாரக் கட்டுக்குள் வந்துவிடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக விமல் வீரவன்ஸ, உதய கம்பன் பில போன்ற அரசியல்வாதிகளும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆளும் தரப்புக்குள்ளேயே போர்க்கொடி தூக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

சீனி இறக்குமதியில் செய்யப்பட்ட மோசடியில் ரணில் ஆட்சிக் காலத்து மத்திய வங்கி பிணை முறி ஊழலில் களவாடப்பட்ட பணத்தைவிடவும் பெரியளவு தொகை சூறையாடப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. காடுகளை அழிப்பது, கட்டுப்பாடற்ற மணல் அகழ்வுக்கு அனுமதிப்பது என்று சுற்றுச்சூழலுக்குப் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசு மீது கடுமையான அதிருப்தி நிலவுகின்றது.

பொது நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்கனவே படைத் துறை அதிகாரிகள் பல இடங்களிலும் நியமிக்கப்பட்டுள் ளார்கள். முக்கிய துறைகளின் தலைமைப் பதவிகள், செயலர் பதவிகள் உட்படப் பலவற்றிலும் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பொதுத்துறை அதிகாரிகளை விடவும் அதிகாரம் மிக்கவர்களாக அவர்களே இருக்கின்றார்கள்.

இவை அனைத்துக்கும் அடுத்து இப்போது ஊடகங்கள் மீதான அடக்குமுறையும் மெல்ல மெல்ல விரியத் தொடங்கியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட உதயன் பத்திரிகை மீது விடுதலைப் புலிகளின் தலைவரது படத்தை வெளியிட்டார்கள் என்கிற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அண்மையில் அரசால் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் நபர்களில் சிலருடன் முகப்புத்தகத்தில் தொடர்பில் இருந்தார் என்று தெரிவித்து டான் தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார், புலிகளின் கொள்கைகளை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டார்கள் என்று தெரிவித்து ரியூப் தமிழ் என்கிற யுரியூப் தொலைக்காட்சியின் பணிப்பாளர் உட்பட இருவரைக் கைது செய்திருக்கின்றார்கள்.

இவை அனைத்தும் மீண்டும் இலங்கையின் ஊடகத்துறை இருண்ட யுகத்தை நோக்கி நகர்ந்து வருவதையே காட்டுகின்றது, அச்சப்படுத்துகின்றது.

இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது ராஜபக்சக்களின் ஆட்சி கடந்த காலத்திலிருந்து எந்தவிதத்திலும் மாறுபாட்டைக் கொண்டிருக்கப்போவதில்லை என்பது உறுதியாகின்றது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளிலும் ராஜபக்சக்களின் ஆட்சியின் கடந்த காலத்திலும் இப்போதும் எந்தவிதமான மாறுதல்களும் இல்லை என்பது ஏற்கனவே தெரிந்ததே என்பதால் அதைத் தவிர்த்த விடயங்கள் மட்டுமே இங்கு எடுத்துக் கையாளப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தத்தில் நாடு மீண்டும் இருண்ட யுகத்தை நோக்கிப் பயணிக்கப் போகிறதா?



அவரது இந்தப் பதில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கான பதிலாகவே அரசியல் அவதானிகளால் நோக்கப்படுகின்றது. ஐ.நா. தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவில்லை என்றாலும் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, கண்ணியம், அமைதி கிட்டுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் இலங்கையின் ஒற்றுமை, உறுதிப்பாடு, நில ஒருமைப்பாடு என்பவற்றின் அடிப்படையிலுமாகவே இந்த விடயத்தை இந்தியா அணுகும் என்றும் அது சொல்லியிருந்தது.

இலங்கையில் அரசியல் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்கிற உலக நாடுகளின் கோரிக்கையை இந்தியா ஆதரிப்பதாகவும் ஐ.நாவில் இந்தியப் பிரதிநிதி தெரிவித்தார். அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணங்களுக்கான முழு அதிகாரங்களையும் வழங்கி அதற்கான தேர்தலையும் நடத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இது பற்றி கோட்டாபய ராஜபக்சவிடம் கேட்கப்பட்டபோதே அவர் அதிகாரப் பகிர்வு என்கிற பெயரில் பிரிவினையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது புவிசார் நலன்களை மற்றைய நாடுகள் அடைய முயற்சிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றார்.

இதன் மூலம் தனது ஆட்சிக் காலத்தில் அதிகாரப் பகிர்வு என்பது நடக்கபோகின்ற ஒன்றல்ல என்கிற கருத்தை அவர் வலியுறுத்தியிருக்கின்றார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். இதனை அவர் தெளிவுபடுத்துவது இது முதல் தடவையல்ல.

அதிபராகப் பதவியேற்ற கையோடு இந்தியாவிற்குப் பயணம் செய்த அவர், அங்கு தலைமை அமைச்சர் மோடி உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்த பின்னர் தி இந்து ஆங்கில பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலும் மக்களுக்கு விருப்பமில்லாத நிலையில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது என்று வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

இப்போது அதற்கு மேலாக அதிகாரப் பகிர்வு என்பதே பிரிவினைக்கான கோரிக்கைதான் என்கிறார்.

**அதிகாரப் பகிர்வை யார் அறிமுகப்படுத்தினர்?**

ஆனால் கோட்டாபய ராஜபக்சவின் தந்தை ராஜபக்சவின் நேசத்துக்குரிய தலைவரான எஸ்.டபிள்.யு.ஆர்.டி.பண்டாரநாயக்கதான் இந்த நாட்டுக்கு அதிகாரப் பகிர்வு அதுவும் கூட்டாட்சி (சமஷ்டி) முறையிலான தீர்வே பொருத்தமானதாக இருக்கும் என்று தெரிவித்திருந்தார். அத்தோடு நின்றுவிடாமல் 1957இல் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வாக தந்தை செல்வாவுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வது தொடர்பான ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார்.

இப்படி தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு அதிகாரப் பகிர்வு என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்கிச் செல்வதற்கு சிங்களத் தலைவர்கள் முன்வந்தமைக்கான காரணம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் பிரிவினையைத் தவிர்க்க முடியாது போய்விடும் என்பதுதான். எனவே பிரிவினைக்கான மாற்றாகத்தான் அதிகாரப் பகிர்வு சிங்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்டு வந்ததே தவிர, பிரிவினைக்கான கோரிக்கையாக அதிகாரப் பகிர்வு முன்வைக்கப்படவில்லை.

இதனை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தும் வகையிலேயே 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தச் சந்தர்ப்பத்தில் தீர்வு குறித்துப் பேசினாலும் "பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத இலங்கைக்குள் தீர்வு" என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறி வருகின்றார்.

அப்படியிருந்தபோதும் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை பிரிவினைக்கான வழியாக அதிபர் கோட்டாபய ராஜபக்ச சிங்கள மக்கள் முன்வைக்கிறார். அவரது மூலோபாயக் குழுவான வியத்கம ஏற்கனவே மாகாண சபைகள் முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அதையொட்டிய கருத்துக்களையே அமைச்சர் சரத் வீரசேகர உள்ளிட்டவர்களும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எல்லாவற்றின் ஊடாகவும் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு எதிராகச் சிங்கள மக்களை அணி திரட்டுவதற்கு அவர் முற்படுகின்றார்.

ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு முன்னரும் பிடித்த பின்னரும் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதன் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்று கோட்டாபய ராஜபக்ச நம்புகின்றார்.

கடந்த வாரம் சீனத் தலைமை அமைச்சரை ஜின் பியுடன் தொலைபேசியில் உரையாடியபோது அவரது கட்சியான சீனப் பொதுவுடமைக் கட்சியின் ஆட்சி அனுபவத்தை மெச்சினார், பாராட்டினார். சீனா ஒற்றைக் கட்சி ஆட்சியின் கீழ் இருக்கும் ஒரு நாடு. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான காலத்தில் அதன் அபரிதமான வளர்ச்சிக்கு அந்த ஒற்றைக் கட்சி, ஒற்றைப் போக்கு ஆட்சியே காரணம் என்று கோட்டாபய நம்புகின்றார். அத்தகைய ஒரு ஆட்சி முறையே இலங்கையின் வேகமான வளர்ச்சிக்கும் பொருத்தமாக இருக்கும் என்று அவர் கருதுகின்றார்.

இந்த நிலையில்தான் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை வல்லரசுகளின் போட்டிக்கான காரணியாகவும் பிரிவினைக்கான மாற்றுக் குரலாகவும் அவர் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்.

ஜெனீவாவிற்குப் பின்னரான அரசியல் களத்தில் கோட்டாபயவின் இந்தக் கூற்று எதிர்காலத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசுவதையும் கடும் சிக்கலுக்குள்ளாக்கக்கூடும். அப்படிப் பேசுபவர்கள் பிரிவினைக்கு முயற்சிக்கிறார்கள் என்கிற ரீதியில் அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடக்கூடும். இந்தப் புதிய அரசியல் களநிலவரத்தை எதிர்கொள்வதற்கான தயார் நிலையும் அதைக் கடந்து செல்வதற்கான சமயோசிதமும் தமிழ்த் தலைவர்களிடம் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை மண்ணித் தலைப் பகுதிகளில் இயற்கை வளங்களைச் சூறையாடுவதில் தமிழ்த் தேசியவாதிகளின் கைகள் ஓங்கியிருக்கின்றன. இவர்களில் பலர் சொந்தமாக டிப்பர் மற்றும் வைக்கோ போன்றவற்றை வாங்கி விட்டிருக்கிறார்கள். ❞

# தமிழரால் அழிவுறும் தமிழர் தாயகம்

வி.அருணாசலம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியல்துறைப் பேராசிரியராக இருந்த புவனேஸ்வரன் இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியவர். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து உற்பத்தி செய்வதற்காக யாழ். குடாநாட்டில் அகழப்பட்டு வரும் சுண்ணாம்புக் கற்களால் சூழலுக்கு ஏற்படவிருக்கம் பாதிப்பு மற்றும் அந்தத் தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள சுண்ணக் கற்கள் எவ்வளவு காலத்துக்குப் போதுமானவை என்பது குறித்து ஆய்வொன்றைச் செய்து தருமாறு இவரிடம் விடுதலைப் புலிகளின் தளபதியான கிட்டு கேட்டிருந்தார்.



அதன்படி பேராசிரியர் புவனேஸ்வரனால் 1986ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அந்த ஆய்வின்படி யாழ்.குடாநாட்டில் சுண்ணாம்புக்கல் அகழும் நிலை தொடருமானால் 11 ஆண்டுகளுக்கு மட்டுமே இங்குள்ள சுண்ணக் கற்கள் போதுமானதாக இருக்கும் என்பது தெரிய வந்தது. இந்த ஆய்வறிக்கை கிடைத்த சில மாதங்களில் புலிகள் சீமெந்துத் தொழிற்சாலையை இயங்கவிடாது தடுத்தனர். ஆனால் இந்த ஆபத்தை அறியாத தமிழ் அரசியல்வாதிகள் தற்போதுகூட மீண்டும் அந்த ஆலையை இயக்குவோம் என்று மக்களுக்கு ஆசை காட்டி வருகின்றனர். அவர்களில் பலருக்குப் பேராசிரியர் புவனேஸ்வரனின் எச்சரிக்கை அறிக்கை பற்றி எதுவும் தெரியாதிருக்கிறது.

**வன்னி மரங்களை அழித்தார்கள்**

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வன்னியில் தொடங்கப்பட்ட பெரியளவான மின்சார இணைப்பு வேலைகளுக்காக முதன்மை வீதியோரங்களில் இருந்த பெரு மரங்கள் வெட்டப்பட்டன. தென்பகுதி ஒப்பந்தகாரர்கள் அவற்றை விற்றுப் பெரும் பணம் சம்பாதித்தார்கள்.

இறுதிப்போரிலிருந்து மீண்டு வன்னியிலிருந்து வவுனியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட மக்களைத் தற்காலிகமாகக் குடியேற்றுதல் என்ற பெயரில் வவுனியாவில் இராமநாதன், அருணாசலம், கதிர்காமர் போன்ற பல முகாம்களை அமைப்பதற்காகப் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டன. அங்கு வெட்டப்பட்ட மரங்களையும் விறகுகளையும் முன்னாள் அமைச்சரான ரிசாத் பதியுதீனின் உறவுக்காரரான ஒப்பந்தகாரர் விற்றுப் பணம் சம்பாதித்தார் என்று குற்றச்சாட்டுகள் உள்ளன.

விடுதலைப் புலிகள் தமது காலத்தில் வடக்குக் கிழக்குக் காடுகளைப் பாதுகாத்தார்கள் என்று முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறிசேன புகழாரம் சூட்டியிருந்தார். புலிகள் கட்டிக் காத்து வளர்த்த மரங்களைப் பின்வந்த பலரும் அழிக்கவே செய்தனர். இன்று வரையும் அழித்துக்கொண்டே இருக்கின்றனர்.

**வீதி சீரமைப்பும் வளங்கல் சூறையாடலும்**

போரின் பின்பு அமைக்கப்பட்ட மிகப் பெரிய வீதிகள், பாலங்கள் கட்டமைப்பு, ஏனைய உட்கட்டமைப்புக்களுக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் இருந்து அதிகளவான மணல், கிரவல், நிரப்பு மண் என நாலாபுறமும் வெட்டி ஏற்றப்பட்டன. இவை முக்கிய இயற்கை அழிவுகளாக மாறியிருக்கின்றன.

மண் அகழ்வுகள் தற்போது தனியார் காணிகளில் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. காணிகளில் இரவிராகச் சட்டத்துக்குப் புறம்பாக மண் அள்ளப்படுகிறது. பரந்தன் பகுதியில் பட்டப்பகலில் வயலுக்குள் மண் வெட்டி ஏற்றப்படுவதை பெரும்போக உத்தியோகத்தர் ஒருவர் தடுத்து நிறுத்திய செய்தி ஒன்று அண்மையில் வெளியாகியிருந்தது. இந்த வயல் மண்ணை அள்ளிச் செல்பவர்கள் வேற்றுக் கிரகவாசிகளோ, தென்பகுதிச் சிங்கள, கிழக்கு முஸ்லிம் மக்களோ அல் லர். தமிழர்களும் தமிழ்த்தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகளும், அவர்களுடனும் அரசுடன் சேர்ந்து இயங்குகின்ற தமிழர்களுமே.

**தமிழ்த் தேசியவாதிகளின் செயல்**

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை மண்ணித் தலைப் பகுதிகளில் இயற்கை வளங்களைச் சூறையாடுவதில் தமிழ்த் தேசியவாதிகளின் கைகள் ஓங்கியிருக்கின்றன. இவர்களில் பலர் சொந்தமாக டிப்பர் மற்றும் வைக்கோ போன்றவற்றை வாங்கி விட்டிருக்கிறார்கள். களத்தில் நிற்கின்ற மண் மாபியாக்களைப் பொலிஸார் கைதுசெய்யும்போது அவர்களைப் பிணையில் எடுக்கவும் ''டிப்பர் றேஸ்'' ஓட்டத்தில் பொது மக்கள் சகட்டுமேனிக்கு அடித்துக் கொல்லப்படும்போதும் அந்தச் சாரதியையும் வாகனத்தையும் மீட்டெடுக்கவும் தமிழ்ச் சட்டத்தரணிகள் தாராளமாக முன்வருகிறார்கள்.

கௌதாரி முனைப் பகுதியில் தமிழ் அரசியல்வாதிகள் சொந்தமாக மணல்திட்டுகளை வாங்கி விட்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. இதில் பலர் தமது மனைவிமாரின் பெயரில் காணிகளை வாங்கியிருக்கின்றனர் எனவும் தெரியவருகிறது. இந்த மணல் மேடுகள் இனிவரும் காலங்களில் அதிக விலைக்கு மணலை விற்பதற்கு உதவப்போகின்றன. இத்தகைய தமிழ் அரசியல்வாதிகளினதும் தமிழ் உயர் அதிகாரிகளினதும் முக்கிய முதலீடாகக் காணப்படுகிறது இந்த மணல் வியாபாரம் (சில பல்கலைக்கழகப் பேராசரியர்களும் இந்த மண் மாபியாவுக்குள் அடங்குகின்றனர்)

**வளங்கள் அழிக்கப்பட்டதன் பின்**


இயற்கை வளங்களை அள்ளியெடுத்த பின்னர் ஏற்படுகின்ற பெரிய வெற்றிடங்கள், குழிகளை எந்த வழிமுறைகளைக் கொண்டும் நிரப்பிவிட முடியாது. இதனால், பல ஆயிரம் ஏக்கர் நிலம் எந்தப் பயன்பாடும் அற்றதாக மாறிவிடுகிறது.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் வகைதொகையின்றி ஆள்துளைக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இதன் மூலம் அதிகமான நீர் வெளியில் எடுக்கப்பட்டு, நிலத்தடி நீர் மட்டங்களில் பாதிப்பும் ஏற்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் இல்லாமல் போவதற்கு அல்லது உவர் நீராவதற்கு வாய்ப்புண்டு. தற்போது இயற்கை வளங்களை அள்ளிச் செல்பவர்கள் எதிர்காலத்தில் குடிநீர் விற்பனையில் களமிறங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன. தமிழ் அரசியல்வாதிகள், உயரதிகாரிகள், வர்த்தகர்கள் எனப் பலர் சேர்ந்து தமிழர் தாயக வளங்களை அழித்து வருவது வேதனைக்குரியது.

இவ்வாறு தமிழர்களின் தாயகத்திற்காகப் போராடுபவர்கள் அந்தத் தாயகத்தையும் அதன் வளங்களையும் பாதுகாப்பதற்கு முண்டியடிப்பதில்லை. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் என்பது அவர்களது மரமண்டைகளுக்கு இன்னும் உறைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொங்கிக் குதித்த போக்குவரத்து காவலரும் கருத்து மாற்றங்களும்



கொழும்பு - பன்னிப்பிட்டிய பகுதியில் லொறிச் சாரதி ஒருவரை அடித்து நிலத்தில் விழுத்திக் கீழே விழுந்து கிடந்த சாரதி மீது போக்குவரத்துக் காவல் அதிகாரி ஒருவர் தொங்கிக் குதித்த சம்பவம் நடந்தேறியது. இத்தகைய பல சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது நடந்தேறினாலும், காணொலியாக்கப்பட்ட இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியது. இந்தப் படக்காட்சி வெளிவந்ததும் சிங்கள காவலர் ஒருவரின் அடாவடித்தனத்தைப் பல சிங்கள மக்கள் முகநூல்களிலும், வலைத்தளங்களிலும் கடுமையாகக் கண்டித்துப் பதிவுகளை இட்டனர். ஒரு சிங்களக் காவல் அதிகாரி இன்னொரு சிங்களச் சாரதியைத் தாக்கியதாக அந்தப் பதிவுகள் இருந்தன. பின்னர் தாக்கப்பட்ட சாரதி மலையகத் தமிழர் எனத் தெரியவந்தது. தெரிய வந்ததும் கருத்துக்களில் மாற்றங்கள் உண்டாகின.

### சிங்களத் தரப்பு மௌனித்தது

தாக்கியவர் சிங்களவராக இருக்க, தாக்கப்பட்டவர் மலையகத் தமிழர் எனத் தெரிந்ததும் சிங்களத் தரப்பினர் இப்போது மௌனம் சாதித்தனர். தாக்கப்பட்டவர் மலையகத் தமிழர் எனத் தெரிந்த பின்னர், தமிழர் தரப்பிலிருந்து கருத்துகள் குவியத் தொடங்கின. சிங்கள காவல் அதிகாரியின் அடாவடித்தனம் பற்றியும் இலங்கைப் படைத் தரப்பினரின் இறுதிப் போர்க் குற்றச் சம்பவங்களுடன் ஒப்பிட்டும் கருத்துகளை அள்ளிவீசினர். இதுபற்றிப் பெரும்பாலும் புலம் பெயர் தமிழர் மத்தியில் இருந்து அதிக கருத்துகள் வெளிவந்தன. அதன்பின்னர் துள்ளிக் குதித்த காவல் அதிகாரி ஒரு முஸ்லிம் என்பது தெரிய வந்தது. இப்போது, முஸ்லிம்களுக்கு எதிரான சிங்களவரின் சீற்றம் வேறு வகையில் அணுகப்படத் தொடங்கியுள்ளது.



### சிங்களத் தரப்பின் பல்டி

தாக்கிய காவல் அதிகாரி முஸ்லிம் எனத் தெரிய வந்ததும், ''ஒரு சிங்களக் காவல் அதிகாரி இவ்வாறு அடாவடியாக நடந்து கொள்ள மாட்டார்'' என்று சிங்களத் தரப்பு பல்டியடித்தது. மற்றையவர்களுக்கு நியாயம் கற்பிக்கும் நிலைக்குச் சென்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னலைப்போல இனி முஸ்லிம்கள் மீதான சிங்களவரின் வெறுப்பு துள்ளிக் குதித்த காவல் அதிகாரி மீதும் திசை திரும்பும். இதை வைத்து அவரை வேலையிலிருந்து நீக்கி வேறு தண்டனைகளை வழங்குவதன் மூலம், தமது நாட்டில் பிழை செய்தால் காவலராக இருந்தாலும் இலங்கை அரசு தண்டனை வழங்கியே தீரும் என்ற நற்பெயரை ஆட்சித்தரப்புப் பெற்றுக் கொள்ள நினைக்கும். அதற்கு அதிக வாய்ப்புண்டு.

அடித்தவரும் அடி வாங்கியவரும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவ்விருவருமே இனிப் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. ஒரு சம்பவம் எவ்வாறு இனம் சார்ந்து அணுகப்படுகிறது என்பதையும் ஒவ்வொருவரும் தமக்குச் சார்பான வகையில் வியாக்கியானம் செய்வதையும் இந்தச் சம்பவத்தை வைத்து உற்றுநோக்க முடிகிறது.

பல ஊடகங்கள்கூட அவ்வாறு தான் செயற்படுகின்றன. ஒவ்வொரு விடயங்களாகத் தெரிய வரத் தெரிய வரத் தாம் தொடக்கத்தில் வெளியிட்ட செய்திகளுக்கு முரணான செய்திகளை வெளியிடுகின்றன. தமது நிலைப்பாட்டிலும் மாற்றங்களைப் புகுத்துகின்றன.

---

# பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாடுகள் சுமந்த மா மனிதர்

## ஆயர் இராயப்பு யோசப்



இலங்கையில் அப்போது தான் போர் முடிந்திருந்தது. 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் மனிதப் பேரவலம் நடந்து முடிந்திருந்தது. வன்னிப் பெருநிலப்பரப்பு குருதிச் சகதியில் சொதசொதப்பாகியிருந்தது. மனித உரிமை மீறல்களும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் இறுதிப் போரில் கட்டுமீறி நிகழ்ந்திருக்கின்றன என்கிற குற்றச்சாட்டு பலமாக ஒலித்துக்கொண்டிருந்த காலம். போர் வெற்றி மமதையில் சிங்களம் களித்துக்கொண்டிருந்தது. அதன் விளைவாக தமிழர்கள் மேலும் மேலும் அடக்குமுறைக்கு உள்ளாகிக்கொண்டிருந்தனர். பல ஆயிரம் தமிழர்கள் வதை முகாம்களாகத் தோற்றமளித்த நலன்புரி முகாம்களில் இன்னும் அடை பட்டுக்கிடந்தனர். நடந்த கொடுரங் கள், இழப்புக்கள், குற்றங்கள் குறித்து உள்ளூரில் வாய்திறப்ப தற்கே தமிழர்கள் அஞ்சிக் கிடந்த அந்தச் சமயத்தில்தான் கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கற்குமான ஆணைக்குழு ஒன்றை நியமித்தார் அப்போதைய அதிபர் மகிந்த ராஜபக்ச. அந்த ஆணைக்குழுவிற்கு முன்னால் வந்திருந்து அரச பதிவுகளில் உள்ள புள்ளிவிவரங்களின்படி போருக்கு முன்னர் வன்னியில் இருந்தவர்களுக்கும் போரின் பின்னர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்களுக்கும் இடையிலான வித்தியாசமாகக் காணப்படும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பினார் ஒரு மனிதர்.

> அடக்குமுறைகளால் துவண்டு போய்க்கிடந்த மக்களின் சாட்சியாக அவரது குரல் தொடர்ந்தும் ஒலித்துக்கொண்டிருந்தது

வெள்ளை முழு ஆடை தரித்து அதன் மீது நீண்டு தொங்கும் தடித்த சிவப்பு இடுப்புப் பட்டி அணிந்து இருந்த அந்த மனிதர் அச்சுறுத்தும் அந்தச் சூழலின் பாதிப்பு ஏதுமின்றி நடந்து முடிந்த பேரவலம் குறித்து அந்த ஆணைக் குழு முன்பாகச் சாட்சியமளித்தார். அது வரையில் அரசல் புரசலாக மறைவிடங்களில் பேசப்பட்டு வந்த இந்த விடயத்தை, அப்போதைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவதற்குக்கூட அஞ்சிய விடயத்தை பொதுவெளியில் ஆதாரங்களோடு ஆட்சியாளர்கள் பதில் சொல்லமுடியாத வகையில் அச்சமின்றி முன்வைத்த அந்த மனிதர் மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்தவரான இராயப்பு யோசப்.


அடக்குமுறைகளால் துவண்டு போய்க்கிடந்த மக்களின் சாட்சியாக அவரது குரல் தொடர்ந்தும் ஒலித்துக்கொண்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டிப் போராடுவதே உண்மையான இறை பணி என்று வரிந்துகொண்டு தன்னியக்கம் இழந்து பொது வாழ்வில் இருந்து ஒதுங்கும் வரைக்கும் குரல் எழுப்பி வந்தவர் ஆயர் இராயப்பு யோசப். தமிழ்த் தலைவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஆளுமையையும் அவர் கொண்டிருந்தார். ஈழத் தமிழர்களின் நலனுக்காக தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதிலும் அதற்காகப் பாடுபடுவதிலும் அவர் ஆர்வமாக இருந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்ததால் அவரை புலிகளின் ஆதரவாளன் என்றும் பிரிவினையை ஆதரிப்பவர் என்றும் தெற்கில் ஊடகங்கள் பரப்புரை செய்தன. ஆனால், ஒரு குரு என்ற வகையில், உண்மையையும், வாழ்வையும், வழியையும் வெளிப்படுத்தி வன்முறைக்குப் பலியான இயேசுவை பின்பற்றுகிறவன் என்ற வகையில் நான் எனது கடமைகளைச் செய்கின்றேன் என்றபடி அவர் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கவில்லை. தான் ஓய்வு பெறும் வரையில் தொடர்ந்தும் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தார்.

அத்தகைய பெருந்தகையைத் தமிழ் மண் இழந்து தவிக்கின்றது. அவரது இழப்பு தமிழர்களுக்கு ஈடுசெய்ய முடியாதது. இறை பணியென்பது துன்பப்படும் மக்களுக்காகப் பாடு சுமப்பதே என்று ஆயர் காட்டிய வழி அனைத்து சமயக்குரவர்களுக்கும் முன்மாதிரியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழை இழக்காதிருப்போமா...?



குட்டித் தம்பிப்பிள்ளை

ஈழத்தவரான நமது தாய்மொழி தமிழ். நம் மத்தியில் பல வட்டாரச் சொற்கள் வழக்கில் இருக்கின்றன. கிராமங்கள், ஊர்கள் தோறும் அந்தந்த மக்கள் குழுக்களுக்கென்று தனியான வழக்காறுமிக்க பேச்சு மொழிகள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தவர்கள், மட்டக்களப்பினர், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை என்றெல்லாம் அதிகம் தமிழர்கள் பரந்து வாழ்கின்ற பிரதேசங்கள்தோறும் அந்தந்த மாவட்டங்களுக்கென்று தனித்துவமிக்க பேச்சாடல்கள் இருக்கின்றன. அந்த மாவட்டங்களுக்குள் இருக்கின்ற கிராமங்களில் அதைவிடவும் பல பேச்சு மொழிகள், பாஷைகள் இருக்கின்றன. ஆனால், காலஓட்டம் இவற்றையெல்லாம் அழித்து வருகிறது. இது கவலைக்குரியது.

பாரம்பரிய மற்றும் பழமையான மொழி மற்றும் பேச்சு வழக்காறின் அழிவுக்குத் தொப்புள் கொடியுறவான தமிழகமும் இந்தியாவும் காரணமாக அமைவதை எவரும் கவனத்தில் கொள்வதாயில்லை. அது மட்டுமன்றி நாகரீகம் என்ற போர்வையில் ஆங்கிலக் கலப்பும் நிகழ்கிறது. ''கொல்லைக்குப் போயிற்று வாறன், அல்லது பின்னுக்குப் போயிற்று வாறன்'' என்பது பெரியவர்களின் பேச்சாறு. ''அம்மா...! கக்கா இருக்கப்போறன்'' என்பது சிறியவர்களின் பேச்சாறு. இந்தியக் கலப்பாலும் வேற்றுமொழிக்கலப்பாலும் இவையெல்லாம் இன்றைக்கு இல்லாது போகின்றன.

**பல தரப்பினரும் இந்த இந்திய மாயைக்குள் புகுந்துவிட்டதைத் தொடர்ந்து புதிய தலைமுறையையும் இந்த மாயை தனக்குள் உள்வாங்கத் தொடங்கியிருகின்றது**

### காற்றலையால் பரவும் தமிழ்

தென்னிந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தொடர் நாடகங்கள், பட்டிமன்றங்கள் எனப் பலதையும் இரசிக்கப் பழகிவிட்ட ஈழத்துப் பெண் வட்டாரங்கள் அந்தத் தொடர்களில் வருகின்ற பாத்திரங்களைப்போல ஆடை அலங்காரம் செய்வது, நகை மற்றும் ஆபரணங்களை அணியும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வது, தொடரைத் தலைமை தாங்கும் பாத்திரத்தைப் போலவும் அதில் வில்லியாக வரும் பாத்திரத்தைப்போலவும் நாட்டாமைத் தொனியில் குடும்பங்களுக்கிடையில் உறவு வளர்க்க முனைவது, அந்தந்தப் பாத்திரங்களின் சாயலில் பேசப் பழகுவது, தொடர்நாடகங்களைத் தினமும் பார்த்துப் பழகி அதில் வரும் பாத்திரங்களின் பேச்சு மொழிகளை அன்றாட வேலைகளில் புகுத்துவது எனக் காற்றலையால் பரவும் தொலைக்காட்சித் தொடர்கள் எம்மவர்களின் மொழியிலும், பேச்சுவழக்கிலும் பெரியளவு மாற்றங்களைப் புகுத்திவிட்டன.


பிரபல தென்னிந்தியச் சினிமா நாயகர்களின் மொழியை இளைஞர்களும் பதின்மவயதினரும் அதைப் புது நாகரீகம் என்று கருதிப் பரவலாகப் பேசுகின்றனர். இந்த இளைஞர்கள், இல்லத்தரசிகளுக்கு அடுத்து இந்த மாசுபாட்டுக்குள்ளாகியுள்ள தரப்பினர் கலைஞர்கள்.

### கலைகளிலும் எழுத்துகளிலும் கலப்பு

தென்னிந்தியத் தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பாகின்ற இசை மற்றும் நடன, பட்டிமன்ற நிகழ்வுகளைத் தமது திறன் விருத்திக்காகவும், பொழுதுபோக்குக்காவும், கலை ஈடுபாடு காரணமாகவும் பார்த்து ரசிக்கின்றவர்களும் தமக்கேயுரிய ஊர்ப் பேச்சாறை இழந்து இந்தியக் கலப்புப் பேச்சுக்குள் விழுந்துள்ளார்கள்.

கலைஞர்கள், எழுத்தாளர்கள் பலரும் இந்தியக் கலைஞர்கள் எழுத்தாளர்களின் கலைகளாலும், எழுத்துகளாலும் ஈர்க்கப்பட்டும், இந்தத் துறைகளில் இந்தியர்களின் வளர்ச்சியை அறிவதற்காக வாசிக்க முற்பட்டும் இறுதியில் அவர்களின் மொழியையும் வரிந்து நிற்கிறார்கள். 70, 80 களில் ஈழத்தில் வெளியாகிய எழுத்துகளில் விரவிக் கிடக்கின்ற எமக்கேயுரிய பேச்சாடல்களை இப்போதைய எழுத்தாளர்களின் எழுத்துகளில் காண முடிவதில்லை. அல்லது இந்தியப் பேச்சாடல்கள் அதிகளவில் உள்வாங்கப் பட்டிருப்பதை இவர்களின் எழுத்துகளில் காணலாம்.

### சிறுவர்கள் மத்தியிலும் பரவல்



இல்லத்தரசிகள் (தொடர் நாடகங்கள்), இளைஞர்கள் (சினிமா), கலைஞர்கள், மற்றும் எழுத்தாளர்கள்(கலைநிகழ்வுகள், நூல்கள்) என எனப் பலதரப்பினரும் இந்த இந்திய மாயைக்குள் புகுந்துவிட்டதைத் தொடர்ந்து புதிய தலைமுறையையும் இந்த மாயை தனக்குள் உள்வாங்கத் தொடங்கியிருகின்றது.

சுட்டி ரீவி எனப்படுகின்ற கார்ட்டூனைப் பார்த்துப் பழகிப்போயுள்ள சிறுவர், சிறுமியர்கள் இங்கு அதிகம், ''கெதியா வாங்கோ, அல்லது டக்கெண்டு வாங்கோ...'' என்பதே கிராமங்களில் இருக்கின்ற பேச்சாடல் இது இன்றைக்குச்'சீ'க்கிரம் வாங்கோ'' என்பதாகிவிட்டது. இப்படிப் பல மாற்றங்கள் சிறுவர்களின் மொழியிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இது இனிவரும் முழுச் சமுதாயத்தையும் மாற்றிவிட வல்லது. சுட்டி ரீவி மாத்திரமன்றி இந்தியர்கள் தயாரிக்கின்ற ஜெய் ஹனுமான், கிருஷ்ணர் லீலைகள், பால்ராமன் கதைகள், முல்லா மற்றும் தெனாலிராமன் கதைகள், பாடல்கள் எனச் சிறுவர்கள் மத்தியில் பரவியுள்ள பல அம்சங்கள் இந்திய மொழிக் கலப்புக்கு வழிகோலவும் ஈழப் பேச்சாடலை இல்லாததாக்கவும் செய்கின்றன.

### பத்திரிகைகள், ஊடகங்களின் நகலெடுக்கும் பண்பு

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் இவ்வாறாகத் தென்னிந்திய மொழியைப் பின்பற்றத் தொடங்கியிருக்க இவர்களைச் செப்பனிடவேண்டிய, அறிவுறுத்தல்கள், அறிவுரைகளை வழங்கவேண்டிய பத்திரிகைகள், ஊடகங்கள் தாமும் அதற்குள் விழுந்து கிடப்பது பரிதாபத்துக்குரியது.

இணையத்தளங்களில் செய்திகளைச் சேகரிக்கும் பழக்கமுள்ள ஊடகங்கள், இந்திய இணையத் தளங்கள் தமது தங்கிலிசைத் தமிழ்ப்படுத்துவதை அப்படியே நகலெடுக்கின்றன. ''ஆப்பிள் (அப்பிள்), ஆரஞ்சு(ஒரேஞ்ச்), ரூபா நோட்டு(தாள் காசு), பால்(போல் - பந்து), மகேந்திரசிங் தோனி (மகேந்திரசிங் டோனி), கொசு (நுளம்மைக் குறிப்பிடுகிறார்கள்), ஹாலிவுட், பாலிவுட் (ஹொலிவூட், பொலிவூட்), சூப்பர் ஸ்ரார் (சுப்பர் ஸ்ரார்) எனப் பல இந்தியத் தங்கிலிஸ்களை அப்படியே உள்வாங்குகின்றன.

போதாக்குறைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒலிபரப்பாகும் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், செய்தி வாசிப்பாளர்களிடமும் இது மிக மோசமாக உள்வாங்கப்பட்டுகிறது. இந்தியத் தமிழ், இந்தியத் தங்கிலிஸை விடத் தமது அடிப்படைத் தமிழையே உச்சரிக்க முடியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். மொழியைக் கவனத்தில் கொள்ளாது தெலைக்காட்சிக்குரிய அழகு மற்றும் கவர்ச்சி நிமித்தம் இவர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்கிறார்கள் இவர்களை விமர்சிக்கும் தரப்பினர். ஆனால், அதுகூட அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

### எமக்கேயுரிய பேச்சு

இப்படியாக இந்தியத் தமிழும், இந்தியத் தங்கிலிஸூம் ஒருபுறம் தமிழ்ச் சமூகத்துக்குள் புகுந்து வர, மறுபுறம் ஆங்கில நாகரீகமும் மாற்றங்களை உண்டுபண்ணி வருகிறது. யூறின் என்றால் அது மூத்திரத்தை - சலத்தைக் குறிப்பதுவே. ஆனால், மூத்திரம் அல்லது சலம் என்று கூறுவதைத் தவிர்த்து ஆங்கிலத்தில் யூறின் என்று கூறுவதே அதிகரித்துவிட்டது.

நாம் எமது மொழியைத் தவிர்த்துப் பிறமொழியில் யூறின் என்பதைப்போல ஆங்கிலேயர்கள் அவர்களின் மொழியைத் தவிர்த்துப் பிறமொழியிலா யூறினை அழைப்பார்கள்? அவர்கள் அவர்களின் மொழியில் அழைப்பதுபோல நாம் நமது மொழியில் அழைக்கப் பின்னிற்கிறோம். பெருமளவானவர்களின் இந்த மாற்றம் எஞ்சியுள்ள கிராம மனிதர்களையும் காவு கொள்ளத் தொடங்கியிருப்பது மீதமுள்ள எமது கிராம மற்றும் பழங்காலப் பேச்சு வழக்குகளுக்கும் தீ வைக்கத் தொடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 கலியாண வாழ்க்கை கஸ்ரமாப் போச்சுது..!!

என்.குமரன்


**வீட்டில பிள்ளையளப் பராமரிக்கிறது தொடங்கி, மனிசியின்ர உடுப்புத் தொய்க்கிறது வரைக்கும் மனுசன் மார்தான் செய்யினம்..**



## வெளுத்துவாங்கும் மகேந்திரத்தார்

"இண்டையான் காலத்தில ஒரு குடும்பத்தை எடுத்தம் எண்டால் என்னதுக்கு எடுத்தாலும் புடுங்குப்பாடு எண்ட நிலைக்கு வந்திட்டினம்.. காரணம் எப்பிடி ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்திறது எண்டு தெரியாத நிலை தான் இருக்குது.." வழமை மாறாத கருத்தோட சொல்லத் தொடங்கினார் மகேந்திரத்தார்.

"அந்தக் காலத்தில தம்பி, ஒரு குடும்பத்தில பத்துப் பதினைஞ்சு பேர் இருந்தாலும் ஆம்பிளையள் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாத்தக் கூடின மாதிரி இருந்திச்சு.. கூட முந்தின காலத்து ஆக்கள் விவசாயம் சார்ந்த வேலையள் அதிகம் செய்யிறதால மத்தியானம் சமைச்சுச் சாப்பாடு கொண்டுவாற பெம்பிளையள்கூட ஒத்தாசையா நிண்டு வேலையளுக்கு உதவியள் செய்து குடுப்பினம்.. அதுதான் அவையள் செய்யிற வேலையா இருக்கும்.. அப்பிடி ஒரேடியா நிண்டு வேலை செய்யிறதால கணவன் மனைவி சகோதரங்களுக்கிடையில அன்பு பாசம் எல்லாம் அதிகமா இருக்கும்.. குடும்பங்களும் எந்தச் சோலியளும் இல்லாமல் சந்தோசமா இருக்குங்கள்.."



"நான் முதல் ஒருக்கால் சொந்தங்களப் பற்றிக் கதைக்கேக்க சொன்னான், கலியாணம் எண்டு செய்யேக்க அந்தக் காலத்தில சொந்தங்களுக்குள்ள செய்யிறதுதான் அதிகம் எண்டு. அப்பிடிச் செய்தால் பிள்ளையள் பிறந்தாலும்கூட இருக்கிற சொந்தக்காரர் பாத்துக் கொள்ளுவினம்.."

"ஆனால், இண்டைக்குப் பாத்தியள் எண்டால், மாறி மாறிக் கலியாணங்கள் செய்யிறதாலயும், கலியாணம் செய்து தனியாப் போய் இருக்கிறதாலயும் அவசர உதவியெண்டால் ஓடி வாறதுக்கு ஒருத்தரும் இல்ல. இண்டைக்குத் தம்பி குடும்பம் எண்டு எடுத்துக் கொண்டால் பெரும்பாலும், இரண்டு பேரும் வேலைக்குப் போறதுதான் அதிகமா இருக்கும். அப்பிடி வேலைக்குப் போகேக்க பிள்ளையள் பிறந்து, அதுகள் வளருற காலத்தில இவையள் தங்கட வேலையள விட்டிட்டு வீட்டில நிண்டு ரண்டு வருசம், மூண்டு வருசம் எண்டு பாப்பினமோ..? இல்லத்தானே.. தங்களோடையே தாய் தேப்பன வச்சிருந்தால் அதுகள் பேரன் பேத்தி எண்டு அன்போட பாக்குங்கள். இல்லாட்டிக்கு அக்கம் பக்கத்தில சொந்தக்காரர் இருந்தாலாவது பாக்குங்கள். அதுகளும் எத்தின காலத்துக்கு எண்டு சொல்லிக் கொண்டு இல்ல.. ஆனால் உரிமையுள்ள சொந்தங்களைப் பக்கத்திலயோ, இல்லாட்டிக்கு கூடவோ வச்சிருந்தால் நிச்சயம் பெரிய உதவியா இருக்கும்.."

"ஒரு குடும்பம் எண்டு இருக்கேக்க நிச்சயம் உதவி எண்டது தேவை.. இண்டைக்குத் தம்பி பல கலியாணங்கள் குடும்பங்களின்ர எதிர்ப்போட நடக்குது. அப்பிடி நடக்கிறதால உதவியள் அவசியமாத் தேவைப்படுகிற நேரத்தில உதவி செய்யிறதுக்கு யாரும் முன்வரமாட்டினம். கஸ்ரப்படவேண்டிய நிலைமைதான் உருவாகும்.. அதாவது தம்பி, ஆதரவு எண்டது இருக்காது.. இந்த மாதிரியான நேரங்களில குடும்பங்கள் அல்லோல கல்லோலப் படவேண்டியிருக்குது" உண்மை நிலவரமும் அதுதான்.

"நான் ஒரு நாள் ஒரு மாஸ்ரர் வீட்டுக்குப் [illegible] அதுவும், காலமை வேலைக்குப் போறதுக்கு முதல் [illegible] மாஸ்ரர் ஒரு கையில குழந்தை மற்றக் கையில பால்ப் போத்தலோட இருக்கிறார்.. என்னதுக்கு எண்டால், வீட்டு வேலைக்காரி வந்தால்தான் பிள்ளைய பராமரிக்க குடுத்திட்டு, தான் பள்ளிக்கூடம் போறதுக்கு வெளிக்கிடலாம் எண்டதுக்காக.. இத்தனைக்கும் மாஸ்டரின்ர மனிசியும் ரீச்சர்தான்.. அவா வேலைக்குப் போறதுக்கு வெளிக்கிட்டுக் கொண்டு நிக்கிறாவாம் அதால தான் பிள்ளைக்குப் பால் குடுக்கிறனாம் எண்டார். சரியெண்டு நான் போய்க் கொஞ்ச நேரத்தில வேலைக்காரியும் வந்திட்டா.. அவா சொன்னா தான் சமைக்கப் போற மற்ற வீட்ட போய் வரநேரம் போய்ச்சுது அதால தான் பிந்தினது எண்டு.. உள்ளுக்கு போன வேலைக்காரி திரும்ப வந்து கேட்டா. ஐயா பாத்திரம் கழுவினபடி இல்லை எண்டு.. அப்பதான் விளங்கிச்சு பாத்திரம் கழுவிறதும் மாஸ்டர்தான் எண்டு..." ஒரு சிரிப்போட மகேந்திரத்தார் சொன்னார்.

"இண்டைக்குத் தம்பி பெரும்பாலும் வீட்டு வேலையள் கூடச் செய்யிறது கணவன்மார்தான்.. பம்பலாவும், அதே நேரம் சில இடங்களில உண்மையாவும் நடக்கிற சம்பவம் தம்பி.. வீட்டில பிள்ளையளப் பராமரிக்கிறது தொடங்கி, மனிசியின்ர உடுப்புத் தொய்க்கிறது வரைக்கும் மனுசன் மார்தான் செய்யினம்.. ஆனாலும் மனுசன் மனிசிக்கு இடையில சண்டை வருகுது. நீ அதைச் செய்யலாம்தானே, நான் அதெல்லாம் செய்ய மாட்டன் எண்டு கதைக்கிறதால.. பேந்து என்ன கதையள் வளர்ந்து கொண்டு போக.. நான் உன்னக் கலியாணம் செய்தது பிழை, அம்மா அப்பான்ர சொல்லுக்கேட்டு நடந்திருக்கலாம் எண்டு எல்லாம் சண்டைபிடிக்கத் துவங்குவினை.." அதிகம் இண்டைக்கு இப்பிடியான சண்டையள் தான் நடக்கிறது எண்டுறது மறுக்கேலாத உண்மை..

"உப்பிடித் தொடங்கி பிறகு காசில்லாட்டிக்குப் புடுங்குப் படுவினை, பிள்ளைகளை வளர்க்கத் தெரியாட்டிக்குப் புடுங்குப்படுவினை, சாப்பாட்டுக்குப் புடுங்குப்படுவினை தொடர்ந்து ஒரே புடுங்குப்பாடாத்தான் இருக்கும்.."

"இண்டைக்குத் தம்பி காசுதான் முக்கிய பிரச்சனையாக் கிடக்குது. வெளியில போகவேணும் எண்டாலும் காசு வேணும், நினைச்ச உடுப்பு வாங்கவேணும் எண்டாலும் காசு வேணும், நினைச்ச சாப்பாடு வாங்கவேணும் எண்டாலும் காசு வேணும்.. உப்பிடி எல்லாத்துக்கும் காசு வேண்டியதாப் போச்சுது.. கலியாணம் செஞ்சால் முதல்ல குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வாறவழியைப் பாக்கவேணும்.. இல்லாட்டிக்கு நல்ல நிலைக்கு வந்தாப் பிறகு கலியாணம் செய்யிற வழியைப் பாக்க வேணும்.."

"ஆனால் இப்ப கலியாணம் செய்து ரண்டு, மூண்டு பிள்ளையளப் பெத்துப்போட்டு என்னெண்டு வளக்கிறது எண்டு தெரியாமல் இருந்தால் பிரச்சினையளும் குழப்பங்களும் இருக்கும் தானே.."

"இப்பத்தையான் குடும்பங்களில சமையல் சாப்பாடு எண்டுறது அடுத்த கட்டப் பிரச்சினை தம்பி.. எத்தினை குடும்பங்களில இப்ப ஒவ்வொரு நாளும் அடுப்பு எரிக்கினை.. மூண்டு நேரமும் கடையிலதான் சாப்பாடு எண்ட நிலையில இருக்கினம்.. இதால ஒழுங்கான சாப்பாடு இல்ல.. சாப்பாட்டுக்காகவும் குடும்பத்தில பற்பல சண்டையள் வருகுது.."

"இப்பிடித் தம்பி, உறவுகளோட சேர்ந்து இருக்காமல், மனுசன் மனிசிக்கிடையில சரியான புரிந்துணர்வு இல்லாமல் இருக்கிறதால இப்பத்தையான் கலியாண வாழ்கை எண்டுறதில அன்பு, பாசம், பிள்ளையள் மேலான கவனம் எண்டு எதுவுமே சரியில்லாமல் போய்ட்டுது.."

"இதை நிவர்த்தி செய்யவேணும் எண்டால், குடும்பங்கள் ஒற்றுமையாவும் உறவுகளோட சேர்ந்தும் சந்தோசமாவும் இருக்கவேணும்.. அதோட தாய் தேப்பன் பிள்ளையள சரியான முறையில வழிநடத்தி நல்லதொரு வாழ்க்கைய அமைச்சுக் குடுக்கிறதுக்கு வழிசெய்ய வேணும்.. அது நடந்தால் எல்லாம் நல்லதா நடக்கும்.."

மூச்சு விடாமலுக்குச் சொல்லி முடித்தார் மகேந்திரத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இல்லாமல்போகும் செவ்வாழை...!


மு. கனகாம்பிகா

தமிழர்களுக்குப் பழக்கப்பட்ட வாழைப்பழங்கள் பலவுண்டு. கதலி, இதரை, கப்பல், மொந்தன் எனப்படுகின்ற கறிவாழை என்று பல ரகங்கள். இவற்றைவிடவும் இங்கு ஏராளம் வாழைப் பழங்கள் விளைகின்றன. ஆனை வாழை, மருத்துவ வாழை, செவ்வாழை என மேலும் பலவித வாழைகள் உண்டு. ஆனால், இவற்றின் அரிது காரணமாகவும் அதனாலுண்டான விலை ஏற்றம் காரணமாகவும் எல்லோரின் பாவனைக்கும் கிடைப்பதில்லை. ஏழைகளின் வாய்க்கும் இவை எட்டுவதில்லை.

இதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்தி பூத்தாற்போல காணப்படுவது செவ்வாழை. அத்தகு செவ்வாழைகளுக்கு இப்போது மவுசு உண்டாகியிருக்கிறது. பல வகை, ரகங்களில் வாழைப் பழங்களை வைத்து விற்கின்ற பிரத்தியோகக் கடைகளில்கூட கதலி, இதரை, கப்பல் ஆகியனவே அதிகம் தொங்குவதைக் காணலாம். சிலவேளைகளில் செவ்வாழைச் சீப்புகள் சில காணப்படலாம். ஆனால், கொரோனாத் தொற்றும் இன்னும் பல வியாதிகளும் இப்போது செவ்வாழைப் பழங்களைப் பலரும் நாடும்படி செய்திருக்கின்றன.

இப்போது ஒரு பகுதியினர் செவ்வாழைப் பழங்களை இரகசியமாகத் தேடத் தொடங்கியிருக்கிறார்கள். செவ்வாழையின் நன்மைகள் பல என்றும், தொற்று நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி அதற்கு உண்டு என்றும் ஆயுர்வேத, சித்த மற்றும் கிராமத்து வைத்தியர்களால் சொல்லப்படுவதால்தான் அதை அவர்கள் தேடத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் செவ்வாழைப் பழங்களுக்குச் சிறியளவு மவுசு உண்டாகியிருக்கிறது என்றும் சொல்லலாம்.

செவ்வாழையை அடிக்கடி சாப்பிடும்போது உடலில் தொற்றுநோய் பாதிப்பு கட்டுப்படும் என்று சொல்லப்பட்டாலும் வாழைச் செய்கையாளர்கள் இந்தச் செவ்வாழைச் செய்கையில் அதிகம் ஈடுபாடு காட்டுவதில்லை. குறைந்தளவிலேயே இந்த வாழையை வளர்க்கிறார்கள். சிலர் தமது தோட்டங்களில் இருந்து இவற்றை அகற்றவும் தொடங்கியிருக்கிறார்கள்.



அதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்பதை அறிவதற்காக இது குறித்துத் தேடியபோது, தொட்டிலடியைச் சேர்ந்த செவ்வாழைச் செய்கையாளர் அபிசேக்கைச் சந்திக்க நேர்ந்தது. நிலமையை விளக்கினார் அவர்.

"என்னட்டச் செவ்வாழை ரெண்டு, மூண்டு அடி நிண்டது. அதை இப்ப நான் அழிச்சுப்போட்டன். அது செய்யிறது நட்டம். அதை நீண்ட காலத்துக்கு வைச்சுப் பராமரிக்க வேணும். அதாலை செலவுகள்கூட. மற்ற வாழையளோட வைச்சுப் பராமரிக்கிறது கஸ்ரம். வளர்ச்சி வீதம் சரியான குறைவு. அதால வருமானமும் குறைவு. உதாரணத்துக்கு கதலி, இதர 6 மாதத்துக் குள்ள குலை வெட்டலாம். இதுகள் ஒரு வருசம்... ஒரு வருசத்துக்கு மேலையும் எடுக்கும் குலை போடுறதுக்கு. நல்ல விலையிருக்குத்தான் ஆனால், கன காலம் மினக்கெட வேணும். அதோட செவ்வாழையத் தனியாத் தோட்டமா வைச்சிருக்க வேணும். மற்ற வாழையளோட நிண்டா மற்ற வாழையளின்ர கலருக்கு காய் வரும். பூ விரியேக்க இனச் சேர்க்கையில கலப்பு நடந்திரும். அதாலை செவ்வாழையத் தனித் தோட்டமாத்தான் வைச்சிருக்க வேணும். கதலி, இதரை, கப்பலைப் போல கலந்து செய்ய முடியாது. தனியா வைச்சால்தான் பழங்கள் தனிச் சிவப்பா வரும்" என்கிறார் அவர். 15 ஏக்கர் அளவிலான ஒருபெரும் வாழைத் தோட்டத்து விவசாயி அவர்.

வாழைப்பழங்கள் என்றால், பொதுவாகவே நீர்ச் சத்துள்ளவை என்றும் மலச் சிக்கலைத் தவிர்க்கக் கூடியவை என்பதுமே எமக்கெல்லாம் தெரிந்த விடயம். ஆனால், இதையெல்லாம் மீறிச் செவ்வாழையில் பொட்டாசியம், விற்றமின் சி ஆகியன அதிகளவில் உள்ளன. நார்ச்சத்து அதிகம் உள்ளதால் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியர்கள் இதைப் பரிந்துரைக்கிறார்கள்.

ஆண்மைத் தன்மைக்கும் குருதி மண்டலத்தில் ஆண்மைக்கான ஊட்டச் சத்திற்கும் தேவையான வேதிப்பொருள்கள் செவ்வாழைப் பழத்தில் இருக்கின்றன. இது மாத்திரமன்றி குழந்தைப் பாக்கியத்துக்கு மருந்தாகவும் இது சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால், இதையெல்லாம் தாண்டித் தொற்றுநோய்களைத் தவிர்க்கும் ஆற்றல் செவ்வாழைகளுக்கு உண்டு என்கிறார்கள். இதையறிந்த சிலர்தான் இப்போது இந்தச் செவ்வாழைப் பழங்களை நாடத் தொடங்கியிருக்கிறார்கள்.

**யாழ்ப்பா ணத்திலை ஒரிடத்திலையும் செவ்வாழையைப் பெரிய தோட்டமாச் செய்யிறதில்லை. பெரிய தோட்டக்காரிலை ஒரு சிலர் தங்களின்ரை வீடுகளிலை இதை வைச்சு வளக்கிறது வழமை**

விளைச்சல் குறைவால் இவற்றின் விலை அதிகமாகத்தானிருக்கிறது. "யாழ்ப்பாணத்திலை ஒரிடத்திலையும் செவ்வாழையைப் பெரிய தோட்டமாச் செய்யிறதில்லை. பெரிய தோட்டக்காரிலை ஒரு சிலர் தங்களின்ரை வீடுகளிலை இதை வைச்சு வளக்கிறது வழமை. நீர்வேலிப் பக்கமிருந்துதான் அதிக செவ்வாழைக் குலைகள் சந்தைக்கு வாறது" இப்படிச் சொல்வதும் அபிசேக்தான்.

சரி செவ்வழைப் பழங்களுக்குத் தொற்றுநோயைத் தடுக்கும் மருத்துவ ஆற்றல் உள்ளது உண்மை தானா? என்று இணையத்தில் தட்டச்சுச் செய்து தேடினால், விக்கிப்பீடியாவின் பழைய தகவல் ஒன்றும் அதை உறுதிப்படுத்துவதாக இருந்தது. "வாழைப் பழங்களிலேயே அதிக அளவு சத்துக்கள் கொண்ட செவ்வாழைப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வருபவரின் உடலில் நோய் எதிர்ப்பாற்றல் பெருகும். தொற்று நோய்கள் இவர்களிடம் தோற்று ஓடும்" என்று எழுதியுள்ளது விக்கிப்பீடியா. ஆனால், நவீன அறிவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கே கட்டுப்படாத பெருந்தொற்றான கொரோனா இதற்குப் பயந்து விலகுமா என்பது கேள்விக்குறிதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கனவு காணும் கணவாய்கள் அதன்பின் ஏராளம் மர்மங்கள்

சாய்ராம்

**“ அதிக தூக்கம் குறித்துத் தனியான அலகொன்றை உருவாக்கி ஆராயும் அளவுக்குக் ஒக்டோ பஸ்களின் நீண்ட நெடிய தூக்கம் இருப்பது அதிசயத்துக்குரியது**







ஆங்கிலத்தில் ஒக்டோபஸ் என்றழைக்கப் படுகின்ற கடல் வாழ் உயிரினம் நாங்கள் உண்ணும் கடல்வாழ் உயிரியான கணவாய் போன்றிருக்கும். கடலில் வாழ்கின்ற உயிரினங்களில் விநோதமானது அது. மனிதர்களுக்கோ மற்றைய உயிரினங்களுக்கோ இருப்பதுபோன்ற குருதி அதற்கில்லை. தசைகளும் விநோதமானவை.

இப்படியிருக்கையில் இந்த ஒக்டோபஸ் பற்றிய ஆராய்ச்சிகள் அதிகரித்திருக்கின்றன. குரங்கிலிருந்தும், அமீபா மற்றும் நீர்வாழ் நுண்ணுயிரிகளிலிருந்தும் பரிணாமம் பெற்றதுதான் மனித உயிர் என்று கூறப்பட்டுவரும் நிலையில்தான் ஒக்டோபஸ்களின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆராயத் தொடங்கியிருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி குறித்த பல மர்மங்கள் துலங்கும் என்று கருதப்படுகிறது. அதற்குக் ஒக்டோபஸ்களை வைத்து முடுக்கிவிடப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சிதான் முத்தாய்ப்பாக இருக்கப் போகின்றன என்று கூறப்படுகிறது.

### விநோதம் நிறைந்த உயிரினம்

ஒக்டோபஸ் என்பது ஓர் அசாதாரண உயிரினம். ஒக்டோபஸ் கூந்தல்கள் என்று நாம் குறிப்பிடுவது அதன் கால்கள், கைகள் நிறைந்த உடற்தொகுதியையே.

ஒக்டோபஸ்களுக்கு மூன்று இதயங்கள் இருப்பதுடன் அனைத்து ஒக்டோபஸ்களின் குருதியும் நீல நிறத்தில் இருக்கின்றன. கணவாய்களைப் போன்றே இவையும் ஆபத்துக் காலங்களில் கறுப்பு மையைப் பீச்சியடித்துவிட்டு எதிரியிடம் இருந்து தப்பும். அதேநேரம் தன்னை உருமறைப்புச் செய்யும் திறனும் அதற்குண்டு. அத்தோடு வெட்டுக்கிளிகளைப்போல இனச்சேர்க்கைக்குப் பிறகு இறந்துவிடுகின்றன என்ற சோகமான வாழ்வியல் அம்சமும் இவற்றுக்குச் சொந்தமானவை. கூடவே இவை முதுகெலும்பும் அற்றவை.

### அதிக தூக்கமும் கனவும்

தரையில் வாழும் உயிரினங்களில் அதிக நேரம் தூங்கும் உயிரினம் என்று பூனையைப் பரவலாகக் குறிப்பிடுகிறார்கள். ஏன்... சில மனிதர்கள்கூட இந்தச் சாதனையை முறியடிப்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால், தண்ணீருக்குள் அதிகம் தூங்கும் உயிரினமாகக் ஒக்டோபஸ்கள் அறியப்பட்டிருக்கின்றன.

ஒக்டோபஸ்களின் பரிணாமம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் அவற்றின் அதிக தூக்கம் குறித்துத் தனியான அலகொன்றை உருவாக்கி ஆராயும் அளவுக்குக் ஒக்டோபஸ்களின் நீண்ட நெடிய தூக்கம் இருப்பது அதிசயத்துக்குரியது.

நீண்ட தூக்கம் இருந்தால் நிச்சயம் அந்தத் தூக்கத்தில் கனவு இருக்கத்தானே செய்யும். இதனால் ஒக்டோபஸ்கள் கனவு காண்கின்றனவா என்பதை அறியக்கூட ஆவல்படுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

பிறேசிலைச் சேர்ந்த அறிவிலாளர்கள்தான் இது குறித்த ஆராய்ச்சிகளில் கால்பதித்திருக்கிறார்கள். இந்த விடயத்தில் இறுதியாக அவர்கள் கண்டறிந்தது என்னவென்றால், மனிதர்களையும் மற்றும் சில உயிரினங்களைப்போலவும் பெரியளவான தூக்க நிலைகளை இந்தக் ஒக்டோபஸ்கள் அனுபவிப்பதையும் அவை கனவு காண்கின்றன என்பதையுமே.

### தூக்கமே திறன்களுக்குக் காரணம்

புத்திசாலித்தனமான அதேநேரம் சிக்கலான நரம்பியல் கட்டமைப்பைக் கொண்ட இந்தக் ஒக்டோபஸ்களின் இந்தத் தூக்க நடத்தையே அவற்றின் திறமைக்கு அடித்தளமாக உள்ளது என்றும் இது ஒரு முக்கியமான உயிரியல் செயற்பாடு என்றும் கூறுகின்றனர் பிறேசிலிய ஆராய்ச்சியாளர்கள்.

நீண்ட தூக்கத்தை அனுபவிக்கும் ஒக்டோபஸ்களின் உடலில் தூங்கும்போது வண்ண மாற்றங்கள் நிகழ்கின்றன. இன்சுலாரிஸ் எனப்படும் ஒரு வகைக் ஒக்டோபஸ் இனத்தை ஆராய்ச்சிக்குட்படுத்தியபோது, இந்த வண்ண மாற்றங்கள் இரண்டு தனித்துவமான தூக்க நிலைகளுடன் தொடர்புடையவை என்பது கண்டறியப்பட்டது. அதை அமைதியான தூக்கம், செயலோடு தூக்கம் என்று வகைப்படுத்துகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

அதாவது அமைதியான தூக்கத்தின்போது, வெளித் தோல் மற்றும் கண் ஆகியன சுருங்குவதால் வண்ண மாற்றங்கள் நிகழ்கின்றன. செயல் அல்லது சுறுசுறுப்பான தூக்கத்தின்போது, அவற்றின் உடலின் நிறத்தையும் அமைப்பையும் மாற்றி நிறத்தை மாற்றுகின்றன.

இந்த அமைதியான தூக்கம் ஏழு நிமிடங்கள் வரையும் செயலில் தூக்கம் ஒரு நிமிடத்துக்கும் குறைவாகவுமே இன்சுலாரிஸிலில் இருந்துள்ளது. இந்தத் தூக்கத்தால் உண்டாகின்ற மாறுபாடுகளை அவதானித்தே ஒக்டோபஸ்கள் கனவு காணலாம் அல்லது கனவுபோன்ற ஒன்றை அனுபவிக்கக் கூடும் என்கிறார்கள் அவர்கள்.

### தூக்கத் தோற்றம், பரிணாமம் பற்றிய ஆராய்ச்சி

ஒக்டோபஸ்களின் தூக்கம் பற்றியும் அவை கனவு காண்பது பற்றியும் மெடிரோஸ் என்கிற ஆராய்ச்சியாளர் கீழ்வருமாறு விளக்குகிறார். ரியோ கிராண்டே ஃபெடரல் பல்கலைக்கழகத்தில் நரம்பியல் அறிவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் இவர். கணவாய்கள் செயலோடு தூங்கிக் கனவு கண்டால், மிகக் குறுகிய காலத்தைக் கொண்ட அந்தக் கனவுகள் சிறிய காணொலித் தொகுப்புகள் (வீடியோ கிளிப்புகள்) போல இருக்கும் என்கிறார்.

மனிதர்கள், ஒக்டோபஸ்கள் ஆகிய உயிரிகள் அரை பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழத் தொடங்கிவிட்டன என்பதோடு இவற்றின் பரிணாம வேறுபாட்டிற்கு முன்னர் அவற்றின் தூக்க முறைகள் மாறுபட்டிருக்க வாய்ப்பில்லை என்கிறார்கள் சில ஆராய்ச்சியாளர்கள்.

ஒக்டோபஸ்களின் தூக்கம், கனவு பற்றிய இந்த ஆராய்ச்சி உளவியல் மற்றும் நரம்பியல் ஆய்வுக்கு ஒரு முக்கிய செய்தியை அளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. படை இலங்கைக்குள் இறங்குவது சாத்தியமா?




**புண்ணியமூர்த்தி**

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் வாக்கெடுப்பில் இலங்கை தொடர்பான தீர்மானம் வெற்றிபெற்றதால் இனி இலங்கையின் நிலை அம்போதான் எனப் பல தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. இந்தத் தீர்மானத்தின் பின்னரும்கூட இலங்கை அரசு பொறுப்புக்கூறலுக்கு முன்வராவிட்டால் ஐ.நாவின் படைகள் இலங்கைக்குள் குதிக்கும் என்றும் சிலர் கருத்துக்கூற விளைந்துள்ளனர். ஈழ - இந்திய - புலம்பெயர் தமிழர் தரப்புகளில் மாத்திரமன்றி ராஜபக்சாக்களுக்கு எதிரான சிங்களத் தரப்பினரில் சிலரும்கூட இவ்வாறுதான் கூறினார்கள். ஆனால் இவை எதையும் கோட்டாபய அரசு கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த அரசியல்வாதிகளும் சீமான் போன்றவர்களும் இந்தியா நேரடியாக இலங்கையை எதிர்த்து வாக்களிக்கவில்லை என்று மோடி அரசைக் கண்டிக்கிறார்கள். இலங்கைத் தமிழ்த்தேசியவாதிகளில் சிலரும் மோடி அரசைக் கண்டிக்கின்றனர்.

### ஆதரித்த நாடுகளே அதிகாரம் மிக்கவை

இந்தியாவுக்கு எதிரான போக்குடைய இந்தியாவின் அயல்நாடுகளான சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியன இலங்கை அரசை ஆதரித்திருக் கின்றன. இலங்கையை ஆதரித்த 11 நாடுகளில் சீனாவும் ரஷ்யாவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள நாடுகளாகும். இந்தியாவுக்கு இந்த அதிகாரம் இல்லை. ஐ.நா. படை இலங்கைக்குள் இறங்கக்கூடிய ஒரு சூழலுக்கு அதிகாரமிக்க நாடுகள் உடன்படப்போவதில்லை. ஆதரித்த நாடுகளின் தொகை அதிகமாக இருந்தாலும் அவற்றால் இலங்கைக்கு எதிராகச் செயற்படவல்ல அழுத்தங்களைக் கொடுக்கமுடியுமா என்பது சந்தேகமே.

போர் முடிந்து இதுவரை காலம் வரையில் ஐ.நா. மற்றும் வெளிநாடுகளின் நேரடித் தலையீட்டுக்குக் கோட்டாபய அரசு இடம் கொடுத்திருக்கவில்லை. இனிமேலும் இலகுவில் அது நடக்கப்போவதில்லை.

### இறுதிப் போரில் இந்தியாவுக்குப் பங்குண்டு

இந்தியாவின் அயல் நாடுகள் இலங்கையை ஆதரித்த நிலையில் இந்தியா வாக்கெடுப்பிலிருந்து நழுவியிருக்கிறது. இது தன்னை ஓரளவுக்காவது நியாயப்படுத்த வழியேற்படுத்தும் என இந்தியா எதிர்பார்க்கலாம். ஒருவகையில் பார்த்தால் அது வாக்களிக்காது விட்டமைகூட இலங்கைக்குச் சார்பானதே.

இறுதிப் போரின்போது இலங்கை அரசுக்கு இந்தியா பக்க பலமாக நின்றது. போர் நடந்துகொண்டிருந்தபோது அனுராதபுரம் தந்திரிமலை படை முகாமே போருக்கான கட்டளைத் தலைமையகமாகச் செயற்பட்டது. அங்கிருந்து முன்னேறி வந்த படையினர் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றித் தங்கி நின்று ஆலோசித்த இடங்களில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடமும் ஒன்று. அதில் இடம்பெற்ற படை உயரதிகாரிகளுக்கான கலந்துரையாடலின்போது இந்திய அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தார்கள் என்பதற்கான நம்பத்தகுந்த தரவுகள் உள்ளன.



அது குறித்த காணொலி ஒன்றைத் தமிழ்நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் மக்கள் தொலைக்காட்சிகூட ஒலிபரப்பியது. இது இறுதிப் போரின்போது இந்தியா வன்னிப் போர் முனையில் நின்றது என் பதற்குக் கிடைத்த முக்கிய ஆவணங்களில் ஒன்று. இதைவிடவும் இறுதிப்போருக்கு இந்தியா கைகொடுத்த பல உதாரணங்கள் உள்ளன. இத்தகைய செயற்பாட்டால் இலங்கை அரசை எதிர்த்து வாக்களிக்க முடியாத நிலை இந்தியாவுக்கு உண்டு.

**இலங்கையை ஆதரித்த 11 நாடுகளில் சீனாவும் ரஷ்யாவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள நாடுகளாகும். இந்தியாவுக்கு இந்த அதிகாரம் இல்லை. ஐ.நா. படை இலங்கைக்குள் இறங்கக்கூடிய ஒரு சூழலுக்கு அதிகாரமிக்க நாடுகள் உடன்ப டப்போவதில்லை.**

### இந்தியாவால் இயலாமை

இலங்கை ஒரு மிகச் சிறிய நாடு எனப் பூகோளப் படத்தை வைத்துத் தீர்மானித்துவிட முடியாத சூழலே தற்போது நிலவுகிறது. இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் முக்கிய கேந்திரத்தில் அமைந்திருப்பதும் அதற்குப் பின்னால் பெரிய உருப்படியான சீனா படுத்துக் கிடப்பதும் இந்தியாவுக்கு இலங்கையை வெருட்ட முடியாத சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியா தனது கொவிட் - 19 தடுப்பு மருந்தை இலங்கைக்கு வழங்கு வதைத் தற்காலிகமாக நிறுத்தியவுடன் சீனாவும் ரஷ்யாவும் அவற்றை உடனடியாக வழங்கத் தயாராகவுள்ளன. இலங்கை ஒரு சிறிய நாடு என்பதால் பெரிய நாடுகளால் இலகுவாகக் கைகொடுத்து உதவ முடிகிறது. ஐ.நாவுடன் முரண்பட்டால் ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடைகளை விதித்துவிடக்கூடும் என்ற பயம் தொடக்க காலத்தில் இலங்கைக்கு இருந்தது. ஆனால், இப்போதைய கொரோனப் பொருளாதாரச் சூழலில் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்கா வும் பெரியளவில் பொருளாதாரப் பின்னடை வைச் சந்தித்துள்ளன. ஆனால் சீனா தனது உற்பத்தி வீச்சைக் கொரோனாக் காலத்தி லேயே பல மடங்காக உயர்த்தியுள்ளது. அதைவிட உலகின் எந்தப் பாகத்துக்கும் கடன் கொடுக்கும் வல்லமையும் அந்த நாடுகளைக் கடன்பொறிக்குள் சிக்க வைக்கும் சக்தியும் சீனாவுக்கு மட்டுமே உண்டு.

இந்த விடயத்தில் இந்தியா சீனாவுடன் போட்டி போட முடியாத நிலையே காணப்படுகிறது. சீனாவின் டி.எம்.ஐ. என்ற தொழிற்துறை நிறுவனம் முகக் கவசங்களைத் தயாரிக்கும் தானியங்கி இயந்திரங்களை அண்மையில் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்தது. முதற்கட்டமாக 30 தொகுதி இயந்திரங்களை வழங்கியதுடன் மேலும் 60 தொகுதிகளை வழங்கவிருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இந்த இயந்திரங்களுக்கான பெறுமதி 55 கோடி ரூபா எனக் கூறப்படுகிறது.

ஆசியாவில் தலைமை என்கிற பெயரைத் தக்க வைத்துக்கொண்டிருக்கின்ற இந்தியாவால் தன்னைச் சுற்றியுள்ள நாடுகளைக் கையாள முடியாத கையறு நிலையே இருக்கிறது. இலங்கை மாத்திரமல்ல பாகிஸ்தான், பூட்டான், திபெத் எனப் பல உதாரணங்கள் இருக்கின்றன.


### இந்தியாவைக் கையாளும் இலங்கை

இலங்கை மீதான தீர்மானத்தில் இந்தியா நடுநிலை வகித்தவுடன் இந்திய மீனவர்கள் 50க்கும் மேற்பட்டவர்களை ஒரே நாளில் கைதுசெய்து இந்தியத் தூதரைக்கூடச் சந்திக்க முடியாதவாறு இலங்கை அரசு கையாண்டது. இது தமிழகத் தேர்தலில் அ.தி.மு.காவுக்கும் பா.ஜ.காவுக்கும் பெரிய பின்னடைவைக் கொடுக்கும் என்பதால் இலங்கை அரசைச் சமாளித்து அதில் 40 மீனவர்களை இந்தியா விடுவித்திருக்கிறது.

தற்போதைய சூழலில் ஈழத் தமிழர்களையோ, 13ஆம் திருத்தத்தையோ வைத்து இலங்கையைக் கையாண்டுவிட முடியாத சூழலே இந்தியாவுக்கு இருக்கிறது. இந்தியாவின் சிந்தனைக்குச் சார்பாக இலங்கைக்குள் செயற்படக்கூடிய நிலையில் கெட்டிக்கார ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் எவரும் இல்லை.

தமிழ்த் தேசியத்தை ஓர் அடையாளமாக வைத்துச் செயற்படும் கட்சிகளை ஒருங்கிணைத்து இலங்கைக்கு எதிராகச் செயற்படுத்தும் கள நிலவரம் வடக்குக் கிழக்கில் இல்லை. நிலமை இவ்வாறிக்கும்போது ஐ.நா. படைகள் இலங்கைக்குள் இறங்க வாய்ப்பில்லை. அவ்வாறு கதைவிடுவோர் தமிழ் மக்களை ஏமாற்றும் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளுக்கு ஒப்பானவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வஜீப்

சில கதைகளைக் கேட்கும்பொழுது இதையெல்லாம் திரைப்படமாக்க முடியுமா? அப்படியே திரையில் கொண்டு வந்தாலும் அவ்வளவு சுவாரசியமாக இருக்குமா? என்று நினைத்துவிடக்கூடிய கதைக்களத்தை எடுத்து திரைக்கதை அமைத்து அருமையான திரை அனுபவத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் அன்னிமேரி ஜசீர். தனது தங்கையின் திருமண அழைப்பிதழை உறவினர்களுக்கு கொடுக்க அப்பாவுடன் செல்கிறான் ஷாதி. அங்கே ஏற்படும் அனுபவங்களே வஜீப்.

கேட்க மிக எளிமையான கதைக்குள் நிறைய சுவாரசியமான சம்பவங்களையும் பாலஸ்தீன மக்களின் தற்போதைய நிலையையும் திரைக்கதையாக்கியிருக்கிறார் இயக்குநர். காலையிலேயே தங்களது பழைய காரை எடுத்துக்கொண்டு அப்பாவும் மகனும் ஒவ்வொருவரின் வீடாக செல்வதில் இருந்து குறும்பும் நகைச்சுவையும் தொடங்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் உறவினர்களை எதிர்கொள்ளும்போதும் அவர்களது கேள்விகளுக்கு மாற்றி மாற்றி பதில் சொல்லும்போதும் வயிறு வலிக்க சிரிக்க வைக்கிறார்கள். உறவினர்களின் கேள்விகளும் உபசரிப்புகளுமாய் ஒவ்வொரு வீட்டிலும் அப்பாவுக்கும் மகனுக்குமான புரிதலும் வளர்கிறது. சில வீடுகளில் பயங்கரமான கவனிப்பும் சில வீடுகளின் வாசலையே தாண்டாமல் வருவதும் உறவினர்களின் மனநிலையை உருவகப்படுத்துகின்றன.


ஒவ்வொரு உறவினர் வீடாகச் செல்லும்போது ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவரும் நடந்து கொள்ளும் விதத்தினை வைத்து அவர்களின் வாழ்க்கைத்தரம் அரசியல் நிலைப்பாடு வரை தெரியப்படுத்துகிறார் இயக்குநர். மகனைப் பற்றி அப்பா உறவினர்களிடம் சொல்லி வைத்ததை ஷாதி எதிர்கொள்ளும் காட்சிகள், இப்படி நிறைய ரகளையான காட்சிகள் இருக்கின்றன. இதனூடே இஸ்ரேலிலும் சரி மற்ற இடங்களிலும் பாலஸ்தீனர்களின் நிலை என்னவாக இருக்கிறது என்பதையும் சொல்லத் தவறவில்லை.

சிலர் இஸ்ரேலுடன் ஒத்து வாழ்வதை விரும்புகின்றனர். சிலர் இஸ்ரேலில் இருந்து வெளியேற விரும்புகின்றனர், ஆனால் அவர்களுக்கு போக்கிடம் என்பது கிடையாது என்பதையும் உரையாடல்கள் மூலமாக தெரியப்படுத்துகிறார் இயக்குநர்.

மார்கழியில் திருமணம் நடக்க விருப்பதால் அழைப்பிதழ் கொடுக்கச் செல்லும் உறவினர்களின் வீட்டிலெல்லாம் கிறிஸ்துமஸுக்கான தயாரிப்புகள் நடக்கின்றன. இத்தாலியில் இருந்து வந்த ஷாதியிடமும் கிறிஸ்துமஸுக்கான ஏற்பாடுகளை யாரும் கேட்காமல் இல்லை. அவர்கள் அனைவரும் பாலஸ்தீனர்கள் என்பது ஆச்சரியத்தை கொடுக்கலாம்.

அப்பாவும் மகனும் எதிரெதிர் துருவங்களாக இருக்கின்றனர். கருத்து, கொள்கை, சினிமா, இசை என எல்லாவற்றிலும் இருவருக்கும் வேறு வேறு பார்வைகள். ஆனால் அதையெல்லாம் தாண்டி ஒருவருக்கொருவர் காட்டும் அன்புதான் அவர்களது பயணத்திற்கான உந்துகோல். அப்பா என்ன சொன்னாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் எளிதாக எடுத்துக்கொள்ளும் மகன், மகனின் அறிவுரைகளையும் கிண்டல் செய்யும் அப்பா என இருவரது உரையாடல்களிலும் நகைச் சுவைக்குப் பஞ்சமில்லை.

அப்பாவும் மகனும் இஸ்ரேலைப் பற்றியும் பாலஸ்தீனர்களின் நிலையைப் பற்றியும் வெளிப்படையாக காட்டமாக உரையாடிக் கொள்ளும் காட்சியும் அதன் பிறகு வரும் காட்சிகளும் இயக்குநரின் முத்திரை. இஸ்ரேலில் பாலஸ்தீனர்களின் நிலை யூதர்களுக்கு [illegible] இருக்கிறது என்பதை [illegible]ர் இயக்குநர். இஸ்ரேலில் இருப்பதையே வெறுப்பதன் மூலம் பாலஸ்தீனர்களுக்கான விடுதலையை, தேசத்தை தேடுகிறான் ஷாதி. ஆனால் யாதர்த்தம் என்னவாக இருக்கிறது என்பதை அப்பாவின் சொற்கள் வழியே அவன் புரிந்து கொள்ள முயல்வதும் அதன் பின்னான காட்சிகளும் உயர் தரம். ஆனால் அதனை அவன் ஏற்றுக்கொண்டானா இல்லையா என்பதை நீங்கள் வஜீப்பில்தான் பார்க்க வேண்டும்.





## எதிர்பார்ப்பும் யதார்த்தமும்





இஸ்ரேலிய படைகளைச் சில நொடிகளே காட்சிப்படுத்தியிருந்தாலும் அதன் தீவிரத் தன்மையை சற்றும் குறையாமல் நமக்குக் கடத்துகின்றனர். அதேபோன்று படம் முழுக்க சிகரெட் பிடிக்கும் காட்சிகள் அனைத்திலும் ஏதோ ஒரு பகடி ஒளிந்திருக்கிறது. மணமகளுக்கான உடைத் தேர்வு செய்யும் காட்சியில் அப்பா, மகன், மகள் மூவருக்கும் இடையே நடக்கும் உரையாடலும் உடல் மொழியின் நுட்பமான அழகியலும் செம்ம. படம் முழுக்க நம்முடனே பயணிக்கும் அந்த கார் கூட அவ்வளவு அழகாக இருக்கிறது. இப்படி படம் முழுக்க அருமையான தருணங்கள் ஏராளம். நமது ஊரில் உறவினர்களுக்கு திருமணப் பத்திரிக்கை கொடுக்கும் நிகழ்வுகளை வஜீப் நிறைய இடங்களில் நினைவு படுத்துகிறது. ஆனால் அதனூடே அவர்கள் பேசியிருப்பது பாலஸ்தீனர்களின் நிலையை, அவர்களது அரசியல் செயல்பாடுகளை. இயல்பாக வாழ்ந்தாலும் அவர்கள் தன்னளவில் சுதந்திரமான வர்களாக இல்லை என்பதையே வஜீப் பகடியான காட்சிகளுடன் அழுத்தமாக பேசுகிறது.

பல்வேறு திரைப்பட விழாக்களில் விருதுகளை வென்ற இந்தத் திரைப்படம் பாலஸ்தீனத்திலிருந்து சிறந்த வெளிநாட்டுமொழித் திரைப்பட விருதுக்காக 90ஆவது ஆஸ்கார் விருதுகளுக்கும் அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த மணம், சுவை உணர்வுகள் நிரந்தரமாகவே பறிபோய்விடுமா?

தொற்று நோயைத் தொடர்ந்து உலகெங்கும் அதிகரித்து வருகின்ற "அனோஸ் மியா" (anosmia) எனப்படும் முகர்ந்து உணரும் திறன் இழப்பு காரணமாகப் பாதிக்கப்பட்டு வருபவர்களில் ஒருவரே மெதீனா.

அஞ்சுகின்றார் அமெரிக்கப் பெண்



38 வயதான எலிஸபெத் மெதீனா (Elizabeth Medina) அமெரிக்காவில் வசிக்கிறார். கொரோனாவின் தொடக்க கட்டத்தில் தொற்றுக்கு இலக்காகிக் குணமடைந்தவர். அச்சமயம் மணம் (smell) சுவை (taste) போன்ற உணர்வுகளை இழந்தவர். ஓராண்டு கழித்து இப்போது அந்த உணர்வுகளை நிரந்தரமாக இழந்துவிடுவேனோ என அஞ்சுகின்றார்.

"எதைச் சாப்பிட்டாலும் காகித மட்டையைக் கடிப்பது போல் உணர்கிறேன்.. எனக்குப் பயமாக இருக்கிறது.." என்கிறார் அந்தப் பெண்.

மூக்குக்கு அடிக்கும் பல்வேறு "ஸ்பிறேய்" மருந்துகளை முயற்சித்தும் பயனளிக்காததால் மெதீனா காது - மூக்கு - தொண்டை மருத்துவரிடமும் மூளை நரம்பியல்நிபுணரிடமும் ஆலோசனை கேட்கிறார்.

மூக்கினதும் நாக்கினதும் உணர்வுகளைத் தூண்டுவதற்காக மணம் குணம், காரம், கசப்பு என்று வெவ்வேறு விதமான சுவைகள் மிகுந்த உணவுகளைச் சமைத்து உண்டு பரீட்சித்துப் பார்த்தும் விட்டார். விதம் விதமான மூலிகைகளை தேயிலைகளை அவித்துக் குடித்தும் பயன் இல்லை. உணர்வுகள் திரும்பவில்லை. வலியும் வேதனையுமே மிச்சம்.

நியூயோர்க் பள்ளி ஒன்றில் வழிகாட்டுதல்ஆலோசகராகப் பணிபுரிந்து வருகின்ற எலிசபெத் மெதீனா, சமைத்தல் உண்ணுதல் உட்பட முன்னர் அனுபவித்தநாளாந்த சந்தோசங்களில் பலவற்றைஇப்போது இழந்துவிட்டதாகக் கூறி வருந்துகிறார். வாரக் கணக்காக, மாதக்கணக்காக அழுதுகொண்டிருக்கிறேன் என்கிறார் அவர்.

தொற்று நோய் காரணமாக ஏற்படுகின்றஇது போன்ற நீண்டகாலப் பக்க விளைவுகளை **Long COVID-19** என்று அழைக்கின்றனர். தொற்று நோயைத் தொடர்ந்து உலகெங்கும் அதிகரித்து வருகின்ற "அனோஸ் மியா" (**anosmia**) எனப்படும் முகர்ந்து உணரும் திறன் இழப்பு காரணமாகப் பாதிக்கப்பட்டு வருபவர்களில் ஒருவரே மெதீனா. இத்தகையோரை மருத்துவ உலகம் இன்னமும் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

"கோவிட்-19 வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்கள் பொதுவாக மூன்று முதல் நான்கு வாரங்களுக்குள் மணம் , சுவை உணர்வுகளை மீளப் பெற்றுவிடுகின்றனர் என்கிறார் பிலடெல்பியாவில் உள்ள ரெம்பிள் பல்கலைக்கழகத்தின் (**Temple University**) உளவியலாளர் வலெண்டினா பர்மா (**Valentina Parma**).

ஆனால் அவரது கூற்றுப்படி 15 வீதமானவர்கள் இந்த உணர்வுகளை மீளப் பெறுவதற்குப் பல மாதங்கள் எடுக்கின்றன.

நிபுணர்களது தரவுகளின்படி உலகெங்கும் இவ்வாறு முகர்ந்து உணரும் திறன் இழந்தோரின் எண்ணிக்கை பத்து மில்லியன்கள் ஆகும். அமெரிக்காவில் மட்டும் சுமார் இரண்டு மில்லியன் பேர்பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண் பார்வை இழப்பு, காது கேட்டல் இழப்பு போன்றவற்றுடன் ஒப்பிடுகையில் சுவை, மணம் என்பவற்றின் இழப்பு

குறைந்ததுதான் என்றாலும் சமூக மட்டத்திலும் உளவியலிலும் அது ஏற்படுத்துகின்ற தாக்கம் பெரியது என்கிறார் உளவியலாளர் வலெண்டினா பர்மா.

"அனோஸ்மியா" (**anosmia**) எனப்படும் முகர்ந்து உணரும் திறன் இழப்புக்கு இதுவரை மருந்து கண்டறியப்படவில்லை. ஆய்வுகள் நடைபெறுகின்றன.பெரும்பாலும் மூக்குப் பயிற்சிகள் மூலமே இழந்த உணர்வை மீட்க முடியும் என்று நம்பப்படுகிறது.

சுவை, மணம் சம்பந்தமான பாதிப்புகள் இருப்போர் மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்வது அவசியம். மூக்கை சுய முயற்சிகள் மூலம் பரீட்சித்துப் பரிசோதித்து அவற்றின் திறனை உறுதி செய்து கொள்ளுங்கள்.

-இவ்வாறு காது-மூக்கு-தொண்டை நல (**ENT**) மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வெளியிட்டுள்ளனர்.

(படம் மற்றும் தகவல் : ஏஎப்பி செய்தி நிறுவனம்.)

## பாணுக்கு பாரம்பரிய மதிப்பு கோருகிறது பிரான்ஸ் நாடு

பிரான்ஸ் அதன் பிரபலம்மிக்க பக்கெற் (**baguette**) என்னும் பாண் வகைகளை யுனெஸ்கோவின்(**Unesco**) பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்க உணவு வகைகளின் பட்டியலில் சேர்க்குமாறு கேட்டிருக்கிறது.

அதற்கான மனுவை முறைப்படி சமர்ப்பித்திருப்பதாக பிரான்ஸ் அரசு வெள்ளியன்று அறிவித்துள்ளது.பிரான்ஸின் அடையாளங்களில் ஒன்றாகிய பக்கெற் (பாண்) மக்களின் பிரதான நாளாந்த உணவுகளில் முதலிடத்தில்இருக்கிறது. ஆண்டுதோறும் பத்து பில்லியன் பாண் வகைகள் நுகரப்படுன்றன என்று புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கி றது. பிரெஞ்சு மக்கள் ஒரு செக்கனுக்கு **320** பாண்களை உட்கொள்கின்றனர்.

கொரோனா வைரஸ் காரணமாக அமுல் செய்யப்பட்டு வருகின்ற பொது முடக்கங்களின் போது பாண் பேக்கரிகள் அத்தி யாவசியக் கடைகளாக அறிவிக்கப்பட்டு அவற்றைத் திறந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

இவ்வாறு பண்பாட்டோடும் நாளாந்த வாழ்க்கையோடும் பின்னிப்பிணைந்த பாணை யுனெஸ்கோ பட்டியலில் சேர்ப்பதற்கு பிரான்ஸ் விரும்புகிறது. நாடுகளின் அல்லது இனக் குழுமங்க ளின் வாழ்க்கைப் பண்பாட்டுடன் தொன்மையான தொடர்புகளைக் கொண்டுவிளங்கும் உணவுகள், பானங்கள் போன் றவற்றை அந்த நாட்டுக்குரிய [illegible] தனித்துவம் மிக்கது [illegible] கிவருகிறது.

பாதுகாக்கப்பட வேண்டிய பண்பாட்டு உணவுப் பாரம்பரியங்களின் பட்டியலில் அவை சேர்க்கப்படுகின்றன.ஆபிரிக்க நாடுகளில் குறிப்பாக மொரோ க்கோ போன்ற அரபு நாடு களில் தனித்துவம் மிக்கதாக விளங்கி வருகின்ற குஸ்குஸ் (**couscous**) என்ற உணவை கடந்த ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் பாரம்பரிய உண வுப் பட்டியலில் சேர்த் துக் கொண்டது.பிரான்ஸின் பக்கெற் உலகெங்கும் பல நாடுகளது பாரம்பரிய உணவு வகைகளுடன் போட்டி போட்டு அடுத்த ஆண்டு வெளியாகவுள்ள யுனெஸ்கோவின் பட்டியலில் இடம்பிடிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயஸை குறுக்கே நின்று த
# உலகப் பொருளாதாரத்தின்

சுயஸ் கால்வாயில் கடந்த வாரம் சரக்குக் கப்பல் ஒன்று குறுக்காகத் திரும்பி தரை தட்டியது. உலகின் மிகப் பெரிய சரக்குக் கப்பல்களில் ஒன்றான எவர் கிவின் தான் செல்லவேண்டிய பாதையில் இருந்து விலகி கால்வாயை குறுக்காக மறைத்துக்கொண்டு நின்றதால் ஒரு வாரத்திற்கு அந்தப் பாதை ஊடான கப்பல் போக்குவரத்து அனைத்தும் முவதும் முடங்கிப்போனது. இதனால் உலகப் பொருளாதாரம் மீண்டும் ஓர் பேரிடியைச் சந்தித்துள்ளது. கொரோனாவின் பாதிப்பிலிருந்து மெல்ல மெல்ல மீண்டுவந்த உலகப் பொருளாதாரத்தை பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக்கிவிட்டது சூயஸ் கால்வாய் போக்குவரத்துத் தடை.

ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான கடல் வணிகத்தில் மிக முக்கிய விநியோகப் பாதை சூயஸ் கால்வாய். மனிதனால் வெட்டப்பட்டது இந்தக் கால்வாய். இது இல்லையேல் ஆசியாவில் இருந்து மேற்கு நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் அனைத்தும் ஆபிரிக்கக் கண்டத்தைச் சுற்றிக்கொண்டே செல்லவேண்டும். இந்தப் பயணத் தூரம் மற்றும் செலவைக் குறைப்பதற்காக 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது சுயஸ் கால்வாய்.

அதற்குப் பின்னர் 1967ஆம் ஆண்டு 6 நாள்கள் போரையடுத்து 8 வருடங்களுக்கு மூடப்பட்ட இந்தக் கால்வாயில் அதன் பின்னர் இப்போதுதான் முதல் தடவையாக மீண்டும் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

**என்ன நடந்து?**

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்டது "எவர் கிவ்வின்" (Ever Given) கப்பல். சீனாவில் இருந்த நெதர்லாந்ததின் றொட்டடாம் துறைமுகத்திற்குச் செல்வதற்காக கடந்த 23ஆம் நாள் சூயஸ் கால்வாயை வந்தடைந்தது. நான்கு உதைபந்தாட்டத் திடல்களின் மொத்தப் பரப்பைக் கொண்ட உலகின் மிகப் பெரிய கொள் கலன் கப்பல்களில் ஒன்று அது. ஜப்பானிய உரிமையாளர் ஒருவருக்குச் சொந்தமானது. தாய்வானின் 'எவகிறீன் மரைன் (Evergreen Marine) நிறுவனத்தால் இயக்கப்படுகிறது. 20 மாடிக் கட்டடத்தின் உயரத்தை ஒத்த 400 மீற்றர்கள் (1400 அடி) நீளமும் 59 மீற்றர் அகலமும் கொண்டது. கப்பலை செங்குத்தாக நிறுத்தி வைத்தால் பாரிஸிலுள்ள ஈபிள் டவரை விட உயரமானதாக இருக்கும்.

200 ஆயிரம் தொன் நிறையுடைய அக் கப்பலில் 20 ஆயிரம் பெரும் கொள்கலன் கள் ஏற்றப்பட்டிருந்தன. றொட்டடாம்(Rotterdam) துறைமுகத்துக் குச் சென்றுகொண்டிருந்த வழியில் அது செங்கடல் ஊடாக எகிப்து நாட்டின் சுயஸ் கால்வாயில் நுழைந்த சமயம் கடும் புயல் காற்றில் சிக்கியது என்று முதலில் கூறப்பட்டது.மணல் புளுதியுடன் கூடிய புயல் காற்று அந்த ராட்சதக் கப்பலின் கட்டுப்பாட்டை மாலுமியிடம் இருந்து பறித்தெடுத்ததுவிட்டது என்றும் கூறப்பட்டது. ஆனால் இது மனிதத் தவறுகள் அல்லது கவனவீனம் காரணமாக இது நிகழ்ந்திருக்கலாம் என்று சுயஸ் கால்வாய் நிர்வாகம் அறிவித்துள்ளது. எதுவானாலும் முழுமையான விசாரணையின் பின்தான் நடந்தது என்ன என்பது முழுமையாகத் தெரியவரும்.

புயலின் வேகம் 200 ஆயிரம் தொன் எடை கொண்ட கப்பலை நிலைகுலையச் செய்து பயண வழிக்குக் கிடையாக- கால்வாய்க்குக் குறுக்கே- திருப்பி விட்டுள்ளது. கப்பலின் முன்னும் பின்னுமான இரு புறங்களும் கால் வாயின் இரு பக்க மணல் கரைகளோடும் தரை தட்டியதால் இடக்கு முடக்காக நடுவில் இறுக்குப்பட்டு நிற்கிறது கப்பல்.

தலைமை மாலுமி உட்பட இருபது மாலுமிகளும் பாதுகாப்பாக வெளியேறி உள்ளனர். அவர்களில் 20 பேர் இந்தியவர்கள் மீட்புப் பணிகள்கப்பல் தரை தட்டி கால்வாயைக் குறுக்காக மறித்ததும் கால்வாய் வழியாகப் பயணிப்பதற்காக வந்த கப்பல்கள் இருபுறமும் தரித்து நிற்கவேண்டி ஏற்பட்டதால் கடல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் உடனடியாகவே மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

பொறிக்குள் சிக்கியது போலக் காணப்பட்ட அந்தக் கப்பலை மீட்டெடுத்து மீண்டும் அதன் பயண வழிக்குத் திருப்புகின்ற பகீரத முயற்சிகள் பெருமெடுப்பில் தொடங்கப்பட்டன எனினும் அதன் பெரும் எடை காரணமாக மீட்பு முயற்சி இலகுவானது அல்ல என்று நிபுணர்கள் முதலிலேயே தெரிவித்துவிட்டனர். அதற்கு நாட்கள், வாரங்கள் ஆகலாம் என்று மதிப்பிடப்பட்டது. கப்பலின் சுமையைக் குறைத்து அதன் மிதக்கும் தன்மையை அதிகரித்தல் அல்லது கப்பல் தரைதட்டிய பகுதியில் அதனடியில் உள்ள மண்ணைத் தோண்டி அதனடியில் உள்ள மண் மற்றும் சகதியை அகற்றுவதன் மூலம் கப்பலை மிதக்க வைக்க முடியும் என்ற இரு தெரிவுகளே இருந்தன.




கப்பலில் இருந்த கொள்கலன்களை மற்றொரு கப்பலுக்கு இறக்குவதென்பது மிகவும் கடினமான பணி என்பதால் கப்பலைச் சுற்றியுள்ள மண் மற்றும் சகதியை அகற்றி அதனை மிதக்கச் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது.

கப்பலின் முன், பின் பகுதிகள் கால்வாயின் கரையோர மண்ணில் பொறுத்துப்போய் நின்றதால் மண் அள்ளும் இயந்திரப் பொறிகள் கரையிலும் சகதியள்ளும் இயந்திரக் கப்பல்கள் கடலிலுமாக இரவு பகலாக பணியாற்றின. 23ஆம் நாள் கப்பல் சிக்கிக்கொண்ட பின்னர் அடுத்த இரு நாள்களில் அதனை மீட்கும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்று அறிவிக்கப்பட்டது. ஆனாலும் சேதமின்றிக் கப்பலை நகர்ந்துவதற்கு கால்வாயில் அது பொறுத்து நிற்கும் இடங்களை அகழ்ந்து ஆழமாக்குவதே ஒரே வழி என்று நிபுணர்கள் நம்பினர்.




எகிப்தின் கோரிக்கையை அடுத்து நெதர்லாந்தைத் தளமாகக் கொண்ட ரோயல் பொஸ்கலிஸ் (Royal Boskalis) என்ற நிறுவனம் தனது நிபுணர்கள், இயந்திரங்கள் சகிதம் கப்பலை மீட்கும் அணியில் இணைந்து கொண்டது. கடற்போக்குவரத்து மற்றும் கடற்கட்டுமானங்கள், பராமரிப்பு தொடர்பான சேவைகளை உலகம் முழுவதும் வழங்கி வருகின்ற பெரிய, நிபுணத் துவம் வாய்ந்த நிறுவனம் அது.

ஒட்டுமொத்த முயற்சியின் பயனாக திங்கட்கிழமை காலை எவர் கிவின் கப்பல் மீண்டும் மிதக்கும் நிலைக்கு வந்ததாக சூயஸ் கால்வாய் நிர்வாகம் அறிவித்தது. மீட்புப் பணியில் ஈடுபட்ட இழுவைக் கப்பல்கள், சகதியகற்றும் இயந்திரக் கப்பல்கள் மற்றும் கால்வாயின் இருபுறங்களிலும் காத்திருந்த கப்பல்களின் கோர்ன் ஒலி மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே எவர் கிவின் கப்பல் தனது பயணப் பாதைக்குத் திரும்பியது. அதனை இழுவைப் படகுகள் அங்கிருந்து மெல்ல மெல்ல கால்வாய்க்கு வெளியே இழுத்துச் சென்றன.

திங்கட்கிழமை மாலை 6 மணி முதல் கால்வாயில் மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். காத்திருக்கும் கப்பல்கள் கால்வாயைக் கடப்பதற்கு வசதியாக இரவு பகலாக அவற்றுக்கு வழி காட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

**பொருளாதாரப் பாதிப்பு**

எவர் கிவின் கப்பல் சூயஸ் கால்வாயை இடக்கு முடக்காக குறுக்கே மறித்துக்கொண்டு இருந்த நிமிடத்தில் இருந்து உலக வர்த்தகத்தில் மணித்தியாலத்திற்கு 41.6 கோடி அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படத் தொடங்கியது என்கிறார் பேராசிரியர் பவுல் கொங். டொலேடோ பல்கலைக் கழத்தின் உலக விநியோக வலையமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுத்த எவர் கிவின் கப்பல்
# ள் மீது மீள விழுந்த பேரிடி!



கொண்டிருந்தன. அவை கால்வாயைக் கடந்து செல்வதற்கு மட்டும் மேலும் ஒரு வார காலம் பிடிக்கும் என்று கால்வாய் நிர்வாகம் தெரிவிக்கின்றது. இந்த ஒரு வார காலத்திற்குள் வந்து காத்திருக்கப்போகும் மற்றைய கப்பல்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அப்படிப் பார்க்கையில் சூயஸ் கால்வாய் சிக்கல் முற்றிலும் சீராகி அதன் வழியான போக்குவரத்து மீண்டும் வழமைக்குத் திரும்ப மூன்று வாரங்களுக்கும் அதிகமான காலம் தேவைப்படலாம். காத்திருக்கும் கப்பல்களில் பல உணவுப் பொருள்களுடன் உள்ளன. அவற்றில் குறிப்

இதன் பாதிப்பு உலக சந்தையீல் உடனடியாகவே எதிரொலித்தது. பெற்றோலியத்தின் விலை அதிகரித்தது. பெட்ரோலியம் தரவி, துணி, அறைகலன்கள், கார்கள், ஆலைத் தயாரிப்புகள் போன்ற நுகர் பொருள்கள் இந்த கால்வாய் வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன. கோப்பி, கழிவறை தாள்கள் (டொய்லட் பேப்பர்) என்பன மட்டுமல்ல பாலியல் சார் விளையாட்டுப் பொருள்களும்கூட சிக்கிக் கொண்டுள்ள பொருள்களின் பட்டியலில் வருகின்றன.

சூயஸ் கால்வாயில் தடை என்ற செய்தி பரவியதுமே மேற்கு நாடுகளில் கழிவறைத் தாள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்கள் முண்டியடித்துக்கொண்டு வாங்கியதால் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சீனாவில் இருந்துதான் இவை மேற்குக்கு வருகின்றன என்று மக்கள் நம்பியதே இதற்கான காரணம். ஆனால் பெருமளவான கழிவறைத் தாள்கள் கனடாவில் இருந்தே ஐரோப்பாவுக்கு வருகின்றன என்பதை நிபுணர்கள் விளக்கவேண்டியிருந்தது.

சூயஸ் கால்வாயில் தடை நீங்கியதைத் தொடர்ந்து முதலில் வந்த கப்பல்களுக்கே முதலிடம் என்கிற வகையில் இடமளிக்கப்பட்டாலும் உணவுப் பொருள்களுடன் உள்ள கப்பல்களையும் விரைந்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எகிப்து அதிகாரிகள் தெரிவித்துள்ளமை, உணவுப் பொருள்களின் விலை யேற்றத்தை சற்றுக் கட்டுக்குள் வைக்கக்கூடும் என்கிறார்கள் நிபுணர்கள்.

ஒவ்வொரு நாளும் இந்த கால்வாய் வழியாக மேற்கு நோக்கிச் செல்லும் போக்குவரத்தின் மதிப்பு 510 கோடி அமெரிக்க டொலர் என்றும், கிழக்கு நோக்கிச் செல்லும் போக்குவரத்தின் மதிப்பு 450 கோடி அமெரிக்க டாலர் என்றும் கப்பல் போக்குவரத்து வல்லுநர் லாயிடு தருகிற தரவுகள் தெரிவிக்கின்றன.

கால்வாய் மூடப்பட்டதால் இந்த ஆண்டில் உலக வர்த்தகத்தில் 18 ரில்லியன் டொலர் பெறுமதியான இழப்பு ஏற்படும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். உலக நீர் வழி போக்குவரத்தைத் தமது கட்டுக்குள் வைத்திருக்கக்கூடிய பெரு நிறுவனங் கள் தமது கடல்வழி தடங்க ளுக்கான கட்டணங்களை ஏற்கனவே வரலாற்றில் இல்லாத வகையில் அதிகரித்திருக் கின்றன. சூயஸ் கால்வாய்க்கு மாற்றுப் பாதையைத் தேட வேண்டியிருப்பதும் அவற்றில் போதிய வசதிகள் அற்றிருப்பதுமே இதற்கான காரணம்.

ஏற்பட்ட தாமதம் மற்றும் ஏற்கனவே நிகழத் தொடங்கியிருக்கும் மாற்று வழித் தடப் பயணங்கள் என்பன ஏற்கனவே உலகப் பொருளாதாரத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளன என்கிறார்கள் நிபுணர்கள். நாம் பயன்படுத்தும் துணியிலிருந்து, உடற்பயிற்சிச் சாதனங்கள், மின்னியல் பொருள்கள், உணவு என்று எல்லாவற்றிலுமே இதன் பாதிப்பு உணரப்படும் என்கிறார் அவர்கள்.




முகாமை கற்கைத் துறையில் பேராசிரியர் அவர்.

விநியோகச் சங்கிலி ஆலோசனை நிறுவனத்தை நிறுவியவரும் அதன் தலைவருமான லிசா அண்டர்சனின் கருத்துப்படி, சுயஸ் கால்வாசியூடாக நாளொன்றுக்கு ஆயிரம் கோடி டொலர் வர்த்தகம் நடைபெறுகின்றது.

எவர் கிவின் கப்பல் கால்வாயை அடைத்துக் கொள்வதற்கு முன்பாக, நாளொன்றுக்கு 80 முதல் 90 கப்பல்கள் கால்வாயைக் கடந்து சென்று கொண்டிருந்தன. சுயஸ் கால்வாய் அமைந்துள்ள எகிப்து நாடு அதன் தேசிய உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதத்தை இந்தக் கால்வாயைக் கடக்கும் கப்பல்களிடம் வசூலிக்கப்படும் கட்டணம் மூலமே பெறுகின்றது.

எவர் கிவன் கப்பல் தரை தட்டியதன் மூலம் இவை இந்த மொத்த விநியோகச் சங்கிலியும் முடங்கியது. சூயஸ் கால்வாய் மீண்டும் திறக்கப்பட்டபோது

பிட்ட காலப் பகுதிக்குள் விநியோகிக்கப்பட வேண்டிய உணவுப் பொருள்களும் உள்ளன. அவை தமது தரிப்பிடத்தை அடையும்போது பாவனைக்கு உதவாதவையாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

இறைச்சிக்கான ஆடுகளை ஏற்றியபடி கணிசமான கப்பல்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. திட்டமிட்ட



அதனைக் கடப்பதற்காக 450 கப்பல்கள் காத்துக்

காலத்திற்கும் கூடுதலான காலப் பகுதி எடுப்பதால் இவற்றுக்கான உணவு, தண்ணீர் என்பன கேள்விக்குறியாகி உள்ளது. அவை தமது கடைசித் துறையை அடையும்போது உயிருடன் இருப்பதற்கு அதிர்ஷ்டம் வேண்டும் என்கிறார்கள் உணவுத்துறை நிபுணர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வீட்டுப் பையன்!

குரு அரவிந்தன்

**எங்களாலே எங்கள் வாழ்க்கையை நல்ல படியாய் அமைக்க முடியும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு முதலில் வரணும். முக்கியமாகப் பொருளாதார நிலையில் உயர வேண்டும்.**

வாசலில் அழைப்பு மணி கேட்டது. கதவைத் திறந்து எட்டிப் பார்த்தேன். எட்டு வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் வாசலில் நின்றான். முகத்தில் ஒரு துடிப்புத் தெரிந்தது.

'நைக்கி' ரீ சேட், நைக்கி சூ, நைக்கி காப். எல்லாமே நைக்கி மயம். தொப்பியின் முன் பக்கத்தைத் திருப்பி பின் பக்கமாகப் போட்டிருந்தான்.

'ஜெஸ்........மே ஐ ஹெல்ப் யூ' என்றேன்.

'ஹாய்!...... அங்கிள், ஐ யாம் கிறிஸ்தோஃபர். வீ....ஆ.... கோயிங் டு....பி...யுவ நெய்பேர்ஸ்'.

என்று அறிமுகம் செய்து சைகையால் அடுத்த வீட்டைக் காட்டினான்.

வெளியே எட்டிப் பார்த்தேன். அடுத்த வீட்டிற்கு முன்னால் வண்டியில் இருந்து வீட்டுத் தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

'ஹாய்....ஐ...ஆம்....சிவா... கிளாட்யு மீட்யூ, யூ ஆர் வெல்க்கம்'

'டாட்..!' இங்கிருந்தே குரல் கொடுத்தான் கிறிஸ்தோஃபர்.

முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் வந்தார்.

'மீட் மை டாட்,... டாட் ஹீ ஸ் மிஸ்டர் சிவா!' என்றான் கிறிஸ்தோஃபர்.

'ஹாய்' என்று நீட்டிய கையைக் குலுக்கினேன்.

'ஐ யாம் மைக். அடுத்த வீட்டிற்கு நாங்கள் தான் புதிதாக குடி வந்திருக்கிறோம். உங்களைச் சந்தித்ததில் ரொம்ப மகிழ்ச்சி. மீண்டும் சந்திப்போம்!'

அவர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்ட பண்பு என் மனதைத் தொட்டது. நாங்களும் கனடாவுக்குப் புதியவர்களாக இருந்தோம், நல்ல அயலவர்கள் கிடைக்காவிட்டால் தினந்தினம் பிரச்சனைதான்!

எனது மகனும் கிறிஸ்தோஃபரும் ஒரே வகுப்பில் படித்ததால் இருவரும் நல்ல நண்பர்களானார்கள். மாலை நேரங்களில் வீட்டிற்கு முன்பாக ஓடி விளையாடுவார்கள்.

பனிக்குளிர் காலம் தொடங்கும் அறிகுறிகள் தெரிந்தன. வீட்டிற்கு முன்பாக உள்ள ரோஜாச் செடிகளைப் பனிக்குளிரில் இருந்து பாதுகாப்பதற்காக அவற்றின் கிளைகளை ஒவ்வொன்றாக நறுக்கிக் கொண்டிருந்தேன்.

'ஹாய்......சிவா....ஹவ் வாயு?' கலகலப்பான குரல் என் கவனத்தைத் திசை திருப்பியது. திரும்பிப் பார்த்தேன், மைக்!

'ஓ.....ஐ....யாம் ஃபயின்! மைக் எப்படி இருக்கிறீங்க?'

'நல்லா இருக்கிறேன் சிவா! ஊரிலே இருந்தது போன்ற பிரச்சனைகள் இங்கே இல்லை. இங்கே வீஹாவ் மோ ப்ரைவஸி! அதனாலே நாங்க ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறோம்'.

எங்க ஊரிலே எங்களுக்குத் தான் பிரச்சனை என்று பார்த்தால் இது என்ன அவர்களுக்கும் அவங்க ஊரிலே பிரச்சனையாமே?

என்னவென்று கேட்டுப் பார்க்க வேண்டும் போல ஆவலாக இருந்தது. எப்படி அறிவது என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது மைக்கே கதையைத் தொடக்கினான்.

'சிவா உங்களோட திருமணம் அரேஞ்ச் மரீச்சா?'

'இல்லை மைக், காதல் திருமணம்!'

'காதல் திருமணமா? அப்போ ஊரிலே உங்க சொந்தக்காரங்க எல்லோரும் இதை எப்படியாவது எதிர்த்திருப்பாங்களே?'

'ஆமாம் காதல் திருமணமென்றால் எப்பவுமே எதிர்ப்பு இருக்கத் தான் செய்யும். ஏனென்றால் ஊரிலே உள்ள பெரியவர்களில் அனேகமானவர்கள் 'மோ கான்ஸவேட்டிவ்வாய்' அதாவது பழமைவாதிகளாய் இருப்பாங்க. அவர்களுக்கு காதல் என்றால் கற்பனையில் கூடப் பிடிக்காது!'

'உண்மைதான்! அவங்க எப்படியும் எதிர்க்கத்தான் செய்வாங்க!'

'அப்படிப் பட்டவர்களுக்கு உண்மையை விளங்கப் படுத்தணும். இல்லை என்றால் அதை எதிர்த்துக் காதலின் வெற்றிக்காகப் போராடணும்.'

'போராடணுமா? எப்படி?'

'எங்களாலே எங்கள் வாழ்க்கையை நல்ல படியாய் அமைக்க முடியும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு முதலில் வரணும். முக்கியமாகப் பொருளாதார நிலையில் உயர வேண்டும். அந்த நம்பிக்கை எங்கள் இருவருக்கும் இருந்திச்சு. அதனாலே நாங்க அவர்களின் எதிர்ப்பைப் பற்றிப் பயப்படலலே!'

'நீங்க சொன்னது போலவே எங்க காதலுக்கும் இப்படியான எதிர்ப்பிருந்திச்சு. நாங்களும் போராடிப் பார்த்தோம், முடியலே!'

'அப்படியா? நீங்களும் போராடினீங்களா?'

'ஆமா! அதனாலதான் வீட்டை விட்டு வெளியே போனோம்னு சொன்னாங்க.

நாங்க யார் எதிர்த்தாலும் பிரிவதில்லை என்று திடமான முடிவோடு இருந்தோம். காதலுக்காக முடியையே துறந்த மன்னர்களின் கதையோடு பார்க்கும் போது, எங்க சொந்த வீட்டைத் துறந்து போவது ஒன்றும் பெரிய கஷ்டமாய் எங்களுக்குப் படலலே!'

'உண்மைக் காதலென்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். நீங்க நல்ல முடிவு தான் எடுத்திருக்கிறீங்க. அப்போ உங்க குழந்தை பிறந்த போது கூட பெற்றோர் வந்து பார்க்கலையா? பேரப்பிள்ளை என்கிற பாசம் கூட அவர்களுக்கு இருக்கவில்லையா?'

திடீரென மைக்கின் முகத்தில் மாற்றம் தெரிந்தது. எதையோ சொல்லத் தயங்குவது போல இருந்தது.

'இல்லை.....சிவா



எங்களுக்குக் குழந்தை இல்லை என்கிற குறை எப்பவுமே எங்க மனசை வாட்டிக் கொண்டிருந்தாலும், அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டே இருக்க முடியுமா? அதனாலே தான் கிறிஸ்தோஃபரை தத்து எடுத்து வளர்க்கிறோம்.'

'கிறிஸ்தோஃபர் தத்துக் குழந்தையா?'

'ஆமா! ஹீ ஸ் வெரி ஸ்மாட். எங்களுக்கும் அவனை நல்லாப் பிடிச்சுப் போச்சு. யார் குழந்தையாக இருந்தால் என்ன? வளர்ப்புப் பிள்ளை என்கிற குறையேயில்லாமல் பார்த்துக்கிறோம்.'

'நல்ல காலம் மைக்! எங்களுக்குக் கடவுள் அந்தக் குறையை வைக்கவில்லை. மைக், குழந்தை இல்லையே என்று நீங்க வீணாகக் கவலைப் படவேண்டாம். கடவுள் உங்களை என்றுமே கைவிட மாட்டார், இன்னும் காலமிருக்கு' ஆறுதல் கூறினேன்.

இந்த நாட்டில் குழந்தைப்பேறு சம்பந்தமாக நவீன வைத்திய வசதிகள் இருந்துமே சிலருக்குத் தீர்க்க முடியாத வேறு சில பிரச்சனைகள் இன்றும் இருக்கத் தான் செய்கின்றன.

இவர்களுக்கு என்ன வயதா போய்விட்டது. இளம் ஜோடி தானே. வாழ்வதற்கு இன்னும் எவ்வளவோ காலம் இருக்கிறது. காலம் தான் இவர்கள் குறையைத் தீர்க்க வேண்டும். ஒருவேளை இல்லாதவர்களுக்குத் தான் 'இல்லை' என்பதன் அர்த்தம் என்னவென்று புரியுமோ என்னவோ!

அன்று காலை தொடக்கம் பனி கொட்டிக் கொண்டிருந்தது. டிரைவ்வே பனியால் மூடிக்கிடந்தது. காரை டிரைவ்வேயில் இருந்து எடுப்பதற்காகப் பாதையைச் சுத்தம் செய்தேன். அடுத்த வீட்டு றைவ்வேயை அவர்கள் குடும்பமாக நின்று சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

'ஹாய்....சிவா' என்றான் மைக் அங்கிருந்து.

'ஹாய்....!' என்றேன் பதிலுக்கு இங்கிருந்து.

எஸ்கிமோக்களைப் போல உடம்பெல்லாம் மூடிக்கட்டி இருக்க, முகம் மட்டும் வெளியே எட்டிப் பார்த்தது. ஈரமான பனியை உருண்டையாக்கிப் பந்துகள் செய்து மூவரும் ஒருவருக்கொருவர் எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்தோஃபர் பனியில் உருண்டு அவர்கள் எறியும் பனிஉருண்டைகளைப் பிடித்துக் கொண்டிருந்தான். கணவன், மனைவி, குழந்தை என்று நல்ல சந்தோஷமான இளம் குடும்பம் என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டேன்.

அன்றிரவு பனிப்புயல் அடித்ததால் எங்கள் வீட்டின் தொலைபேசித் தொடர்பில் ஏதோ கோளாறு ஏற்பட்டுத் தொடர்பு தடைபட்டது.


அவசரமாக ஒரு நண்பரோடு தொடர்பு கொள்ளவேண்டி இருந்ததால் நான் அடுத்த வீட்டிற்குப் போனேன். வாசல் மணியை அடித்தபோது, மைக்தான் வந்து கதவைத் திறந்தான். வந்த விடயத்தைச் சொன்னேன்.

'என்ன சிவா இதற்குத் தயங்கணுமா? யூ ஆர் வெரி வெல்கம்' என்று சொல்லி தொலைபேசி

**(செல்போன்கள் பாவனைக்கு வரமுன்பு கனடாவில் நடந்த ஒரு சம்பவம் சிறுகதை யாக்கப்பட்டது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்றுப்பல் சிரித்தது



நான் சொல்லப் போகும் விஷயம் உங்களுக்கு கண்டிப்பாக, நம்புவதற்கு கடினமாகத் தான் இருக்கும். என்னை மனப்பிறழ்வு ஏற்பட்டவன் என்று கூட நீங்கள் நினைக்கலாம். அதற்காக நான் வருந்தப் போவதில்லை. இந்த கதையை வாசிக்கத் தொடங்கியதால், உங்களுக்கும் நம்புவதை தவிர வேறு வழியில்லை.

தெற்றுப் பல் என்றதும் உங்களுக்கு தோன்றுவது என்ன? நடிகை சித்தாரா, பாவனா, போன்ற தெற்றுப் பல் அழகிகளின் புன்னகை தானே. ஆம், பெண்களுக்கு அழகாகத் தான் இருக்கிறது. எனக்கும் அவர்களைப் போல தெற்றுப்பல் உண்டு. ஆனால் நான் பெண் அல்ல. ஆண். ஓர் எழுத்தாளன். உங்கள் மனதில் இந்த நொடிக்கு முன்னால் ஏற்பட்டிருந்த எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போனதை நான் புரிந்து கொள்கிறேன்.

உங்கள் ஆர்வம் குறைந்து விட்டது எனில், என் வாழ்க்கையின் சுவாரசியமான பகுதி பற்றி இனிமேல் தான் கூறப் போகிறேன். இந்த தெற்றுப் பல், நான் பிறந்ததிலிருந்து என்னுடன் இல்லை. திடீரென்று ஒரு நாள், எனக்கு முளைத்தது.

இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள், இரவு சிறுநீர் கழிக்கும் உணர்வு அதிகமாகி உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டேன். நேரம் இரவு இரண்டு மணி ஆகியிருந்தது. எழுந்து வீட்டின் பின்னால் சென்று சிறுநீர் கழித்துக் கொண்டே சுற்றிலும் பார்த்தேன். நல்ல குளுமையான காற்று. பலாப்பழ வாசத்துடன் வீசியது.

கொல்லிமலை. சுற்றுலாத் தளத்தால் இன்னும் மாசுபடாத இயற்கை இங்கேதான் இருக்கிறது. வாகன இரைச்சல், கரும்புகை, மூக்கை அடைக்கும் புழுதி, வெறுப்பேற்றும் டிராபிக் இன்றி சுத்தமான காற்றும், மூலிகை வாசமும், அளவான குளிரும், மாலை நேர சாரல் மழையும், அருவிகளும் என, எப்போதும் மனதை மயக்கும் மலை இது. என் எழுத்துப் பணிகளுக்கு எல்லா விதத்திலும் அமைதி இங்கேதான் கிடைக்கிறது. எனவே கோடை காலத்தை இங்கேதான் வாழ்ந்து ரசிக்கிறேன்.

கொல்லிமலை முழுவதுமே, பலாவும் அன்னாசியும் ஏப்ரல், மே மாதங்களை குத்தகைக்கு எடுத்து தங்கள் வாசனைப் பெருமைகளை மலை முழுவதும் பேசித் திரியும். காபியும், மிளகும் இன்ன பிற வாசனைப் பொருட்களும் விளையும் மலை. உங்களுக்கு பலாப்பழ வாசனை பிடிக்காமல், தலையை சுற்றும் ஆசாமி என்றால், மலையில் கஷ்டம் தான். வாசனையை உள்ளிழுத்துக் கொண்டே எதிரே பார்த்தேன். தூரத்தில், உயர்ந்த மலையின் உச்சியில் மாசி பெரியசாமி கோவிலின் விளக்கு மங்கலாக தெரிந்தது.

வானம் நிலவின்றி இருளாக கிடக்க, மீன்கள் தெளிவாக மின்னிக் கொண்டிருந்தன. பெயர் தெரியாத பூச்சிகளின் சத்தம் காதுகளில் தாக்கியது. பார்வையை கோவிலின் விளக்கிலிருந்து திருப்பி எழுந்தேன். திடீரென்று எதிரே கண்ணைக் கூசும் வெளிச்சம் ஒன்று, வானத்திலிருந்து இறங்கியது. பச்சையும் நீலமும் கலந்து, லேசர் ஒளி போல ஒரே நேர்க்கோட்டில், மைக்ரோ நொடிகளில் இறங்கி வெளிச்சம் அணைந்து, மீண்டும் இருள் மூடிக் கொண்டது.

கதைகளில் மட்டுமே கண்ட காட்சி, எனக்கு நேரே இருநூறு மீற்றர் தூரத்தில் நடந்துவிட்டது. அது என்ன? என்னவாக இருக்கும்? ஏதாவது சிறிய விண்கல் காற்று மண்டலத்தின் உராய்வில் எரிந்து விடாமல் தப்பித்து வந்ததா? ஆர்வமும், பயமும் போட்டி போட, இதயம் துடிப்புகளை எகிற விட்டது. அருகில் சென்று பார்ப்பதா? வேண்டாமா? எவ்வளவு தான் பகுத்தறிவோடு பேசினாலும், சிந்தித்து அறிவியல் பூர்வமாக தர்க்கம் செய்தாலும், நேரடி அனுபவமாக சந்திக்கும்போது நடுங்கத்தான் செய்கிறது மனது.

நீ ஓர் எழுத்தாளன். இது போல பல காட்சிகளை வடிவமைத்து, உன் கதைகளில் உலவ விட்ட நீ பயப்படலாமா? என்று மனது அறிவைக் கீறி விட, அருகில் சென்று பார்த்து விட முடிவு செய்தேன். வீட்டிற்குள் சென்று சிறிய டார்ச் லைட் எடுத்துக் கொண்டு, அந்த இடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

வானம் நிலவின்றி இருளாக கிடக்க, மீன்கள் தெளிவாக மின்னிக் கொண்டிருந்தன. பெயர் தெரியாத பூச்சிகளின் சத்தம் காதுகளில் தாக்கியது. பார்வையை கோவி லின் விளக்கிலிருந்து திருப்பி எழுந்தேன். திடீரென்று எதிரே கண்ணைக் கூசும் வெளிச்சம் ஒன்று, வானத்திலிருந்து இறங்கியது.

மெல்ல அடிகள் எடுத்து வைத்து நடந்தேன். நூறு மீற்றர் தூரம் நடந்திருப்பேன். மீண்டும் ஒரு வெளிச்ச மின்னல் முன்பு போலவே. இம்முறை மேல் நோக்கி, வானத்தை பார்த்து சென்று மறைந்தது. 'மை காட், சம் திங் கோயிங் ஆன் தேர்' வாய்விட்டு பேசிக்கொண்டு, வேகமாக நடந்தேன். கால்களில் செடிகள் இடறின. அந்த இடத்தை அடைந்து, டார்ச் லைட் வெளிச்சத்தை அடித்தேன். எதுவும் இல்லை. ஆம் எதுவுமேயில்லை அங்கே.



உங்களைப் போலதான் நானும் ஏமாந்தேன். ஏதோ இருக்கும் என வந்தால், இங்கே ஒன்றுமில்லை. நம்முடைய மனம் எப்போதும் இயற்கையாக நடக்காத, விதிகளுக்கு உட்படாத செயல்கள் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. எனவேதான் இது போல நடக்கிறது போலும், பிரமையாக இருக்குமா? என்று நினைத்துக் கொண்டு, டார்ச் லைட்டை வானத்தை நோக்கி அடித்தேன். பின் அணைத்தேன். மீண்டும் அடித்தேன்.

மீண்டும் டார்ச்சை அணைத்து, திரும்பிய போது காலடியில் வைரம் போல ஏதோ மின்னியது. குனிந்து பார்த்தேன். வெள்ளையாக, ஒரு பெரிய கல் உப்புப் பரல் போல இருந்தது. மேலே சிறிய மண் துகள்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. ஆனால், மின்னியது. இரண்டு விரல்களின் நுனிகளால் எடுத்து, வெளிச்சத்தில் பார்த்தேன். அது மெல்ல நெளிந்து கொண்டிருந்தது.

எனக்கு கால்கள் நடுங்கத் தொடங்கின. வியர்த்து வழிய, நடுங்கும் கைகளால் பிடித்து, அதை உற்றுப் பார்த்தேன். அதற்கு முகம், கண்கள், வாய் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. அவைகள் இருக்க இது ஒரு விலங்கா என்ன? ஏதாவது பூச்சியின் லாவாவாக இருக்கலாம். ஆனால் அதனுடைய மின்னும் ஒளி எப்படி? என்று அதை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். அது நெளிவதை நிறுத்தியது. என்னை உற்று நோக்கத் தொடங்கியது. கண்கள் இல்லையெனினும் அது என்னை பார்ப்பதை என்னால் உணர முடிந்தது. இதயத் துடிப்பு கட்டுக்கடங்கா மல் உதற, நான் மயங்கத் தொடங்கினேன்.

மென்மையான சூரிய ஒளி சன்னல் வழி கண்களில் பாய, மெல்லக் கண் விழித்தேன். வீட்டிற்குள், படுக்கையில் இருந்தேன். நேற்று இரவில் நடந்தது நினைவுக்கு வர, வேகமாய் எழுந்து உட்கார்ந்தேன். மயங்கியதற்குப் பின் என்ன நடந்தது என்று பிடிபடவில்லை. நீண்ட நேரம் சிந்தித்து மூளை சோர்வாகியது. கண்களை துடைத்துக் கொண்டு அருகிலிருந்த கண்ணாடியை எடுத்துப் பார்த்தேன். என்ன இது? என் பற்களின் வரிசையில் ஏதோ ஒரு மாற்றம். ஆம். எனக்கு தெற்றுப்பல் முளைத்திருந்தது. உற்று நோக்கினேன். கண்ணாடியில் அது தனியாக என்னைப் பார்த்து சிரித்தது. என்னிடம் பேசத் தொடங்கியது. அன்றிலிருந்து நான் அறிவியல் புனைக் கதைகள் எழுத தொடங்கினேன். இந்தக் கதை தான், 'அது' எழுதிய முதல் அறிவியல் புனைவு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொங்காதிருந்த பொங்கல் பானைகள்...!

கதை 27

விக்தியானந்தன் - முள்ளியவளை

1996 காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு தடவை கொக்கட்டிச்சோலை சிவன் கோவிலுக்குப் படுவான் கரையைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் சென்றேன். அன்று ஏதோ விசேட பொங்கலொன்று கொக்கட்டிச் சோலைக்கு முன்பாகவுள்ள மகிழடித் தீவுப் பகுதியில் நடந்தது.

என்னை அழைத்துச் சென்ற நண்பரின் உறவினர்களும் அந்தப் பொங்கல் வழி பாட்டில் ஈடுபட்டிருந்தனர் அங்கு சென்று நான் நண்பருடன் அந்த வழிபாட்டை அவானித் தேன். அந்தக் கோவிலில் பிராமண பூசகர்கள் இல்லை. ஊர் மூத்தவர் ஒருவரே வழி பாட் டுக்கான ஆயத்தங்களைச் செய்தவண்ணம் அதற்குத் தலைமை வகித்தார். அது மிகச் சிறிய கோவில். மக்கள் தாங்களே பொங்கி மடை பரவி பகிர்ந்துண்ணும் பழக்கமுள்ள கோவில். அதுவே தமிழர்களுக்குள் பிராம ணியக் கலப்பு ஏற்படுவதற்கு முன்பிருந்த தொன்மை வழிபாடாகும்.

பொங்கலுக்கு 50 பானைகளுக்கு மேல் வைக்கப்பட்டிருந்தன. விறகுபோட்டுக் கடுமையாக எரித்துக் கொண்டிருந்தார்கள். எனினும் ஒரு பானையில்கூட பால் பொங்கவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "எங்கட ஊரில் இவ்வளவு நெருப்புகூடத் தேவையில்லை. கெதியாய்ப் பொங்கிவிடும்" என்று நண்பரிடம் கூறினேன் அவன் அதற்கான காரணத்தைக் கூறினான். அதைக் காட்டத்தான் என்னை அங்கு அழைத்துச் சென்றதாகவும் கூறினான்.

".இந்தப் பொங்கல் பானைகளில் பால் பொங்கக்கூடாது என்று சிலர் மந்திரித்துக் கட்டியிருக்கிறார்கள். அதை முறியடிப்ப தற்காகவே பொங்கல்காரர்கள் தற்போது முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்க ளால் முடியாது போனால், கட்டியவர்களை அவிழ்த்துவிடுமாறு வெளிப்படையாகக் கூறுவார்கள். கட்டியவர்கள் அவிழ்த்து விட்டதும் பால் பொங்கும்" என்றார்.

எனக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. கோவிலுக்குள் இருந்து வந்த அந்தப் பூசாரி, "சரியடாப்பா இனியாவது அவிழ்த்து விடு ங்கோ" என்றார். அவர் அவ்வாறு கூறியதும் நாங்கள் நின்ற இடத்திலும் வேறு பல இடங்க ளிலும் செவ்வரத்தம் பூக்கள் மண்ணிலிருந்து 3 அடி உயரம் வரை கிளம்பி எழுந்து தரை யில் விழுவதைக் கண்டேன். பூக்கள் நிலத் தில் விழவும் அடுப்பில் வைத்து எரிக்கப் பட்டுக்கொண்டிருந்த எல்லாப் பானைகளில் இருந்தும் பால் பொங்கி வழியவும் சரியாக இருந்தது நேரம்.

பிராமணர்கள் ஓதும் சமஸ்கிருத மந்திரம் அல்ல அவர்கள் சொல்லும் மந்திரம். அவை தமிழில் ஓதப்படுபவையாக இருந்தன. அத்தோடு பிராமணர்களைப்போல வெளிப் படையாகச் சத்தமாகவோ, ஒலிபெருக்கியிலோ ஓதுவதில்லை. இந்துக்களில் பலர் சமஸ்கிருதத்தில் மட்டும்தான் மந்திரங்கள் உண்டு என்று நம்புகின்றனர். அதைவிடவும் சக்தி மிக்க மந்திரங்கள் தமிழில் உண்டு என்பதை அன்றுதான் தெரிந்துகொண்டேன்.

இந்த மந்திர சக்தியாலும் ஒரு சில மூலிகை களாலுமே மட்டக்களப்பு மாந்திரீகம் வடிவ மைக்கப்பட்டிருக்கிறது. பில்லி, சூனியம், பேய், பிசாசு கலைப்பது எனப் பல்வேறு விதமான விடயங்கள் அந்த மந்திரத்தை வைத்தே செய்கின்றனர். அவர்களின் மந்திர சக்தியால் கட்டுகின்ற ஒன்றை சமஸ்கிருத மந்திரத்தால் அவிழ்த்துவிட முடியாது. சமஸ்கிருதத்தைவிடத் தமிழ் மிகப் பழையது என்பதை மட்டக்களப்பு மந்திரங்கள் இன்றும் நிரூபித்த வண்ணமே உள்ளன.

"நீண்ட இழுபறிகள், அரசியல் அழுத்தங்கள் பற்றிய செய்திகளுக்குப் பின்னரேஇந்த இறுதி அறிக்கை வெளியாகி இருக்கிறது."

# விலங்கு மூலமே கோவிட் பரவல் ஆய்வுகூடக் கசிவு வாய்ப்பு அரிது

## ஐ. நா. விசாரணைக் குழு அறிக்கை



கொரோனா வைரஸின் மூலம் எது என்பது தொடர்பான ஐ. நா. சுகாதார நிறுவன விசாரணை அறிக்கை, மறுப்பு ஏதும் தெரிவிக்காத தரப்பான விலங்கு கள் மீது மீண்டும் பழிபோட்டிருக்கிறது.

இடைநிலை விலங்கு ஒன்றின் மூலமே வைரஸ் மனிதருக்குத் தொற்றியிருக்க வேண்டும். ஆய்வு கூடத்தில் இருந்து அது கசிந்திருப்பதற்கான வாய்ப்புகள் மிக மிக அரிது-என்று உலக சுகாதார நிறுவனத்தின் வல்லுநர்கள் குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெளவாலில் இருந்து அடையாளம் தெரியாத இடைநிலை விலங்கு ஒன்றின் மூலமே வைரஸ் மனிதர்களுக்குத் தொற்றியிருக்கலாம் என்று ஆரம்பம் முதல் அறிவியலாளர்கள் தெரிவித்து வந்த கருதுகோளையே தற்போது உலகசுகாதார நிறுவனமும் தனது முடிவாகஅறிவித்துள்ளது.

எனினும் பண்ணை விலங்குகள், குளிரூட்டப்பட்ட இறைச்சி(frozen meat) என்பனவும் தொற்றுக் கான காரணங்க ளாக இருக்கக் கூடும் என்ற கருதுகோள்களை நிரா கரிக்க முடியாது எனத் தெரிவி த்திருக்கின்ற உலக சுகாதார நிறுவனம், கிழக்கு ஆசியாவுக்கு வெளியே உள்ள விலங்கு உணவுகள் தொடர்பான அவதா னதை யும் புறந்தள்ளிவிட முடி யாது எனக் கூறி உள்ளது. இவை தொடர்பாகப் பூகோள ரீதியான பரந்துபட்ட ஆய்வுகள் அவசியம் என் றும் பரிந்துரை செய்துள்ளது.

கொரோனா வைரஸ் எங்கி ருந்து முதலில் மனிதர்களுக்குப் பரவியது என்ப தைக் கண்டறியும் விசாரணைகளில் சீனாவோடு இணைந்து ஈடுபட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார நிறுவன(WHO) நிபுணர்கள் குழுவின் அறிக்கையிலேயே இத்தகவல் வெளியி டப்பட்டுள்ளது.

நீண்ட இழுபறிகள், அரசியல் அழுத்தங்கள் பற்றிய செய்திகளுக்குப் பின்னரேஇந்த இறுதி அறிக்கை வெளியாகி இருக்கிறது.

கொரோனா வைரஸ் சீனாவில் வுஹான் நகரில் அமைந்துள்ள வைரஸ் பரிசோதனைக் கூடத்தில் இருந்தே கசிந்து மனிதருக்குத் தொற்றியது என்றும் அதற்குத்தங்களிடம் ஆதாரங்கள் உள்ளன என்றும்அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் குற்றம்சாட்டி இருந்தது. ஆனால் அதற்கான ஆதாரங்களை அமெரிக்கா உலக சுகாதார நிபுணர்களிடம் வழங்கவில்லை.

உலக சுகாதார நிறுவன நிபுணர் குழுஅதன் விசாரணைகளை சுயாதீனமாகச்செய்வதற்கு சீனா இடமளிக்கவில்லை.

பல ஆதாரங்களை அது காட்டாமல் மறைத்து விட்டது என்றும் பலதரப்பட்ட கருத்துக்கள் செய்திகளாக வெளியாகி இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜா இதழைப் பயன்படுத்தி முகப் பொலிவு..!



சண்முகதேவி கௌரிதரன்
(அழகுக் கலை நிபுணர்)

தொடர்ந்தும் பழவகைகள், மரக்கறிகள், வீட்டிலுள்ள பொருள்களைப் பயன்படுத்தி இயற்கையான அழகுக் குறிப்புகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பார்த்தோம்.

இந்த வாரம் ரோஜா இதழைப் பயன்படுத்தி முகத்தின் அழகினை மேலும் அழகாக்குவது எவ்வாறு என்பதனைப் பார்க்கலாம்.





முதலில் ரோஜா இதழ்களை நன்கு தூய்மைப்படுத்தி பின்னர் உலர வைக்க வேண்டும். பின்னர் இந்த உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சேர்ப்பதற்காக சிறிதளவு பன்னீர், சந்தனம் என்பவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும்.

மூன்று பொருள்களையும் சேர்த்து அரைத்து பின்னர் கீழிருந்து மேலாக முகத்தில் பூச வேண்டும். பூசி சிறிது நேரங்களின் பின்னர் குளிர்ந்த நீர் கொண்டு கழுவ வேண்டும்.

தொடர்ந்து 3 வாரங்களாக இதனைப் பூசிவர தோலின் நிறம் பொலிவு பெற்று முகம் புத்தழகு பெறும்.

(14ம் பக்கத் தொடர்ச்சி...)

## அடுத்த வீட்டுப் பையன்....

இருக்கும் இடத்தைக்காட்டி விட்டான். பாதணியை வாசலில் கழட்டி வைத்து விட்டு தொலைபேசியில் பேசிவிட்டுத் திரும்பிப் போகும் போது நன்றி சொன்னேன். மைக்கோ விடவில்லை. இருந்து காப்பி சாப்பிட்டு விட்டுப் போகுமாறு அன்போடு கேட்டான்.

அந்த அன்புக் கட்டளையை மறுக்க முடியாமல் அரை மனதோடு ஹாலில் உட்கார்ந்தேன்.

'டார்லிங்....கம்..ஹியர், வீ ஹாவ் ஏ விசிட்டர்' மாடியில் உள்ளபடுக்கை அறையை நோக்கி மைக் குரல் கொடுத்தான்.

எனக்கு என்னவோ போல இருந்தது. நேரம் கெட்ட நேரத்தில் இங்கு வந்து அவர்களைக் கஷ்டப்படுத்தி விட்டேனோ என்று நினைத்தேன்.

'ஜானி...டார்லிங்....இங்கே வந்து பாரேன்.....நெக்ஸ்டோ நெய்பர் சிவா வந்திருக்கிறார்.'

ஜானி! அழகான பெயர், பெயரைப் போலவே அவளும் அழகாக இருப்பாளோ? அவளை நான் நேரில் கண்டதில்லை, அவள் வருவாளா? என்று ஆவலோடு காத்திருந்தேன்.

சற்று நேரத்தால், மாடிப் படிகளில் யாரோ மெதுவாக அடி வைத்து இறங்கி வரும் ஓசை கேட்டது.என் நெஞ்சு பட படத்தது.

மைக்கின் காதலி, தங்கள் காதலுக்காக கடைசிவரை போராடி வெற்றி கண்டவள். சொந்தம் பந்தமெல்லாம் துறந்து அவனேதான் தன் உலகம் என்று துணிச்சலோடு அவனோடு வாழ வந்தவள். எப்படி இருப்பாள்?

ஆவலோடு எதிரே இருந்த மாடிப்படியைப் பார்த்தேன். அவள் இறங்கி வரும்போது பான்ஸ்ஸால் மூடாத மல்லிய சிவந்த பாதங்கள் தான் முதலில் தெரிந்தன. சற்றே நிமிர்ந்து மேலே பார்த்தேன். ஜீன்ஸ் பேன்ட், மெல்லிய நீலத்தில் பூப்போட்ட நைக்கி சார்ட். சார்ட்டின் மேல் பட்டன் பூட்டப் படாமல் அலட்சியமாய்த் திறந்திருந்தது. இந்தக் காலத்திற்கும், நாட்டுக்கும் ஏற்ற 'பாஷனபிளான மொடேன் கேளாக' இருக்கலாம் என்று மனசு கணக்குப் போட்டது.

மெல்லிய புன்சிரிப்போடு, அருகே வந்து மெல்லக் குனிந்து, 'ஹாய் மிஸ்டர் சிவா! ஐ யாம் ஜான், கிளாட்யு மீட்யூ!' என்று சொல்லிக் கை குலுக்கிய போது ஜானியின் மேல் பட்டன் திறந்த சட்டைக்குள்ளால் நெஞ்சு நிறைய சுருண்ட முடி தெரிந்தது. விழிகள் தடுமாறி ஒரு கணம் உறைந்து போக, செய்வதறியாது வியப்போடு அதற்கும் கொஞ்சம் மேலே நிமிர்ந்து பார்த்தேன். ஒற்றைக் காதிலே தோடு. மஸ்றூம் கட்.

'என்ன சாப்பிடுறீங்க? காப்பியா.......இல்லை......யூஸ்....ஏதாவது?' என்ற இனிய குரலுக்கு என்ன சொன்னேன் என்று எனக்கே தெரியாது. காபிதான் கேட்டிருப்பேன்.


ஏனென்றால் காபிதான் குடித்ததாக ஞாபகம், வாயெல்லம் கோப்பியின் ஒருமாதியான கசப்புச் சுவையை உணர முடிந்தது.

'தாங்யூ' சொல்லி அப்புறம் அவர்களுக்கு 'பாய்' சொல்லி விட்டு, அவசரமாக எனது வீட்டிற்கு வந்து வாசலில் அழைப்பு மணியை அடித்தேன். வாசற் கதவை எனது மகன் தான் திறந்தான்.

'அப்பா... கிறிஸ்தோஃபருடைய அம்மாவைப் பார்த்தீங்களா? இஸ் ஸி நைஸ்?'

தனது நண்பனின் தாயைப் பற்றி அறியும் ஆவலில் மகன் கேட்டான். எனது காதிலே மகன் கேட்டது விழாதது போல நான் உள்ளே போனேன்.

'அம்மாவா..?' மகனின் அந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்ல...?



## விஜய்சேதுபதியாக ஹிரித்திக் ரோஷன்...!

தென்னிந்தியச் சினிமாவில் தனக்கெனத் தனியிடத்தைத் தக்க வைத்திருப்பவர் விஜய்சேதுபதி. எந்தவொரு திரைப் பின்னணியும் இல்லாமல், ரஜினி, விஜய், அஜித்தைப் போன்ற முன்னணி நடிகர்கள் காட்டும் நாயகத்தனமும் இல்லாமல் தனது சகட்டுமேனியான நடிப்பால் பலரையும் ஈர்த்துத் ததனக்கெனத் தனியான ரசிகர் பட்டாளத்தை உருவாக்கி வைத்திருப்பவர் அவர். சூது கவ்வும், நடுவில கொஞ்சம் பக்கத்தக் காணோம், சுப்பர் டீலக்ஸ் எனத் தொடங்கி விக்ரம் வேதா வரையில் அவர் நடித்த படங்கள் பலவும் பாராட்டுக்கும் பெரு வரவேற்புக்கும் உரியவை. இறுதியாக விஜயின் மாஸ்ரர் படத்தில் வில்லன் பாத்திரம் ஏற்று நடித்தது இதுவரையான அவரது எழுச்சி மிக்க சினிமா வாழ்வில் சற்றே விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டது. ஆனாலும் நாயகத்தனம் மிக்க நடிகர் ஒருவரின் படத்தில் நடித்தாலும் தனது நடிப்பால் அவர் பலரையும் கவரத் தவறவில்லை.

இந்த நிலையில்தான் அவர் மாதவனுடன் இணைந்து நடித்த விக்ரம் வேதா திரைப்படத்தைப் பொலிவூட்டில் மறுஆக்கம் செய்து அதில் விஜய்சேதுபதி ஏற்று நடித்த வேதா பாத்திரத்தில் ஹிந்தி நடிகர் ஹிருத்திக் ரோஷன் நடிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தனது 25ஆவது படமாக அமையவிருக்கின்ற இந்தத் திரைப் படத்தைச் சிறப்பாக்குவதற்காகக் ஹிருத்திக் ரோஷன் தனது கதாபாத்திரத்தை மெருகேற்றி வருகிறார் என்று சொல்லப்படுகிறது. இதில் விக்ரம் கதாபாத்திரத்தில் சைஃப் அலி கான் நடிக்கிறார். கடந்த இரண்டு மாத காலமாகவே வேதா கதாபாத்திரத்துக்கான உடல் அமைப்பு, வசன உச்சரிப்பு என்று கதாபாத்திரத்தை மெருகேற்றும் வகையில் தனியாக அர்ப்பணிப்புடன் பயிற்சி செய்து வருகிறார் ஹ்ரித்திக். இந்தப் படம் தனது 25ஆவது படம் ஆதலால் அது என்றும் நினைவில் இருக்கக்கூடிய படமாக இருக்க வேண்டும் என்பதால் ஹிரித்திக் அதற்காகச் தனியான முயற்சிகளைச் செய்து வருவதாகப் பொலிவூட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமையறிதல்...

ஐயங்கொண்டான் சுவாமிகள்



எமையறிதல் எனுமொருசெயல் முறையானது சரியான முறையில் மேற்கொள்ளப்படுவது அவசியம். ஆனால் நாம் பிறரை அறிவதில் காட்டும் ஆர்வமும் முயற்சியும் நம் சார்ந்து மேற்கொள்ளப்படுகிறதா என்றால் அனேகமாக இல்லை என்பதுதான் யதார்த்தம்.

கடந்த வாரங்களில் பேர் அறிஞன் என்பவர் இப்பகுதியில் முன்வைத்த கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டியவையே. அதில் அவர் பெரிதும் வலியுறுத்திய ஒரு விடயம் சிந்தனையாற்றல் பற்றியது என்பதைக் கவனத்திற் கொண்டு இப்பகுதி அமையலாம்.

விடயங்கள் தொடர்பான எமது ஆர்வம் அறிவு மற்றும் ஈடுபாடு என்பனவே எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. மேற்கூறிய மூன்று காரணிகளையும் சரிவர இணைத்துக் கொள்ளும்போது எம் மீதான, எம் உள் -வெளித் தோற்றப்பாடுகள் தொடர்பான வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாதது. அவ்வாறு தன்னியல்பாக வினாக்கள் எழவில்லையாயின் வலிந்து எழுப்பப்படுவது அவசியம்.

வினாக்கள் எழும்போதுதான் எமது நிலைப் புள்ளி தொடர்பான தெளிவைப் பெறலாம். சாதாரணமாக நாம் மேற்கொள்ளும் அனேகமான விடயங்கள் யாராலோ எப்போதோ ஏதோவொரு தேவைக்காகக் கண்டடையப்பட்டவை அல்லது உருவாக்கப்பட்டவை என்பதை முதலில் உணர்ந்துகொள்ளுதல் அவசியம்.



நாம் அது அல்லது அவை தொடர்பாக ஏதாவது, எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா? சிந்திக்கிறோமோ இல்லையோ கண்களை மூடிக்கொண்டு பின்பற்றுகிறோம்.

இங்கே தீட்டு எனும் ஒரு விடயத்தை மத நம்பிக்கை மூத்தோர் வாக்கு என்பவற்றுக்கப்பால் நாம் எவ்வாறு விளங்கிவைத்திருக்கிறோம்? பிறப்பு வீடு முதல் சாவு வீடு வரையில் பல்வேறு விதமாகப் பல்வேறு விளக்கங்களுடன்தான் அதனைப் பின்பற்றுகிறோமா?

சரி தீட்டு என்பது என்ன? என்றாவது சிந்தித்திருக்கிறோமா? அதனது வடிவம் குணம் ஆயுள் என எதையாவது அறிந்துள்ளோமா? அறிய முயற்சித்துள்ளோமா?

தீட்டு என்பது தொற்று என்று கூறத்தக்கது என அறிவியல்பூர்வமாக விளங்கிவைத்திருக்க வேண்டிய ஒன்று. ஆனால் அது நடைமுறையில் சமய ஐதீகங்களுடனான பின்பற்றுதலுக்கான ஒரு சடங்காக மட்டுமே விளங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆயுள்கூட புரோகிதர்களால் க(தி)ணிக்கப்பட்டுள்ளமை கண்கூடு.

மரணத் தீட்டு ஜனனத் தீட்டு எனப் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன. தற்காலத்தில் கன்னித் தீட்டு என்று ஒன்று பெண்கள் பருமடைதலுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

வருணங்கள் அல்லது சாதிக்கேற்ற விதமாக தீட்டினது ஆயுள் மாறுபடுகிறது என்பதுதான் இங்கு வேடிக்கையானது. இதனை யாராவது ஏன், எதற்காக, எப்படி என்று அறிய முயன்றதுண்டா?

பலர் கூடுமிடங்களில் தொற்றுநோய்களைப் பரப்பக்கூடிய ஆபத்துமிக்க நுண்ணுயிரிகள் தாராளமாக இருக்கலாம். எனவே அவ்வாறான சூழலில் உலவிய ஒருவர் தன்னையும் அவ்விடத்தில் பயன்படுத்திய தனது பொருட்களையும் தொற்று நீக்கம் செய்துகொள்வது அவசியமானது. மரண வீடுகளுக்குச் செல்வதால் மட்டுமல்ல சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும்போதும் கவனத்தில் கட்டாயமாக்கிக்கொள்ளவேண்டிய அறிவுபூர்வமான ஒன்றுதான் இது.

நாம் மரண வீடுகளை மட்டுமே தீட்டுள்ள இடமாகக் கணித்திருக்கிறோம். நுண்ணுயிரித் தொற்று நீக்க நடவடிக்கைகளைச் செய்கிறோம். தற்காலத்தில் பேருந்துப் பயணத்தில் இறந்துபோன உடலில் விழுந்து புரண்டழுது விட்டுவரும் ஒருவருடன் உரசியபடி பயணித்து கோயிலுக்கும் போகிறோம் திருமண வீட்டிற்கும் போகிறோம். தீட்டு என்பது படுகின்றபாடு இதுதான்.

எதையும் சரிவர விளங்காத உணர்ந்து கொள்ளாத ஐந்தறிவுச் சீவன்களாகவே இருக்கிறோம் என்பதுதான் உண்மை. ஆனால் ஏற்றுக்கொள்வதில் உடன்பாடின்றி இருக்கிறோம். சிந்தனை என்பது விரிந்தது பரந்தது. புதிது புதிதாக மேலெழுவது. நாம் சடங்குகள் வழி ஐதீகங்கள் வழி சிந்தத்து எமக்கான சிந்தனையாற்றலை நாமே எமது கால்களில் இட்டு நசுக்கிக்கொண்டிருக்கிறோம். இன்னும் சிந்திப்போம்...

(தொடர்ச்சி....)



## கனவு காணும் கணவாய்கள்...

ஒக்டோபஸ்களுக்கேயிருக்கின்ற பல அதி நவீன அறிவாற்றல் அம்சங்கள் முதுகெலும்புள்ள சில இனங்களில் மட்டுமே காணப்படுகின்றன. ஒக்டோபஸ்களின் இந்தச் சிறப்புக்குக் காரணம் அவை மிகவும் மாறுபட்ட மூளை கட்டமைப்பைக் கொண்டுள்ளமையே என்கிறார் சித்தார்தா ரிபேரோ என்பவர். இவர் பிரேசிலின் ரியோ கிராண்டே மூளை ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவுனர்.

எது எப்படியிருப்பினும் மனிதர்கள் மற்றும் ஒக்டோபஸ்கள் போன்ற வேறுபட்ட உயிரினங்களின் தூக்கச் சுழற்சி போன்ற அடிப்படைப் பண்புகளைப் புரிந்து கொள்வது உயிரினங்களின் அறிவாற்றல் மற்றும் மூளை வடிவமைப்பு ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கு நவீன அறிவியல் உலகுக்கு உதவும் என்று நம்பப்படுகிறது.

# பொலிஸ் பயிற்சியில் யாஷிகா...!



ரசின் ரகுமானின் நடிப்பில் வெளியாகிய துருவங்கள் பதினாறு திரைப்படத்தில் நடித்ததன்மூலம் தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமானவர் நடிகை யாஷிகா ஆனந்த். அதன் பின்னர் நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கும் பிக்பொஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதையெல்லாம் தாண்டி இளையோர்கள் பலருக்கும் அவர் அறிமுகப்பட்டது 'இருட்டு அறையில் முரட்டுக் குத்து' என்கிற பாலியல் நகைச்சுவைத் திரைப்படம் மூலமே. அதில் கவர்ச்சிக் கன்னியாகக் காட்சியளிப்பார் யாஷிகா.

இந்த நிலையில்தான் மற்றொரு புதிய படத்தில் அவர் நடித்து வருகிறார் என்கிற செய்திகள் வெளிவந்துள்ளன. புவன் என்கிற இயக்குநரின் படத்தில் 'சல்பர்' என்கிற பெண்மையப் படத்தில் நடிக்கிறாராம் யாஷிகா. இதில் அவருக்குப் பொலிஸ் அதிகாரி வேடம். இதனால் பொலிஸ் பயிற்சி எடுத்துத் தன்னைத் தயார்படுத்தி வருகிறாராம் அவர். புதுவித விதமான தனது ஒளிப்படங்களை சமூக வலைதளங்களில் குவித்து தன்னை பிரபலப்படுத்திவருகின்ற யாஷிகாவின் பொலிஸ் பயிற்சிப் படங்களைக் காணவும் அவருடைய இரசிகர் பட்டாளம் முண்டியடித்த வண்ணமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக்குழறவேணும் போலையில்லையோ?

அதிலை வாசிகசாலையடிக்குப் பயந்து பயந்து போனன். அங்கை சம்பரும் மணியத்தாரும் இருந்தினம். நானும் அதிலை கொஞ்சம் விலத்தி இருந்து கொண்டன். மணியத்தார் பயந்து போனமாதிரியிருந்தார். "இஞ்சார் கதிரேசண்ணை யாழ்ப்பாணமும் துலைஞ்சுதுபோலை...?" எண்டு சொல்ல வந்ததை முழுசாய் சொல்லாமலுக்கு நிப்பாட்டினார் மணியத்தார்.

"உண்மைதான் கண்டியளே! அள்ளுகொள்ளையாயல்லே கிடக்குது கோதாரி... நினைக்கவே பயமாக் கிடக்குது..." எண்டு சம்பர் சொல்லிக் கொண்டிருக்க, தம்பர் வந்து இருந்துகொண்டார். "ஆனால் ஒண்டல்லே! இஞ்சாலிப் பக்கம் ஒரு அசுமாத்தமும் இல்லையல்லே?" எண்டார் தம்பர். "எட பேய்த் தம்பா! இஞ்ச வாறதுக்குக் கனகால மெடுக்குமோ? சோதிச்சாத் தானே தெரியும்... ஆராருக்கோ எவரெவருக்கோ?" எண்டார் மணியத்தார். "அதிலையும் ஒரு உண்மை இருக்கல்லோ?



இஞ்சார் தம்பு..! உனக்கொண்டு தெரியுமே? யாழ்ப்பாணக் கடையளிலை வேலைசெய்யிற ஆக்களுக்குப் பீ.சீ.ஆர். செய்தது எப்பிடியெண்டு தெரியுமே? எல்லாரும் வாருங்கோ சோதிக்க வெண்டு அறிவிச்சு அங்கை வைச்சுச் சோதிச்சவங்களல்லே? வேலைசெய்யிறதுகள் பாவங்கள் அரக்கப்பரக்கப் பயந்தடிச்சுப் போனதுகளல்லே?அதுகள் சனத்தோடை சனமாய் பஸ்சுகளிலையல்லேபோனதுகள்.. அதிலைஆரும் தொத்தோடை இருந்திருந்தால்...?"

"மொக்கனுகள்! பரப்பிப்போட்டே சோதிக்கிறது?" எண்டு புறுபுறுத்தார் சம்பர்.


"அதோடை இன்னுமொண்டுக வனிச்சனீங்களே? தனிமைப்படுத்தின இடங்களிலையிருந்து உத்தியோகக்காறர் ஜொப் காட்டைக் காட்டி உத்தியோகத்துக்குப் போகலாமாம்...படுலூசுத் தனமாயெல்லே இருக்கு இதக் கேக்க... ஜொப்காட் இருந்தால் தொத்தாதோ அல்லது அவையாலை பரவாதோ? அவை எத்தினை இடங்களிலையிருந்து வாறபோற ஆக்களோடை பழகுவினம் சொல்லுங்கோ பாப்பம்?" எண்டுகோவமாய்ச் சொன்னார் மணியத்தார்.

"உவை பாருங்கோ கனக்கப் படிச்சவையல்லே? உப்பிடித்தான் யோசிப்பினம். தொத்து நோயின்ரை குணங்களை அறியாமல் பேய்க்கதையள் கதைக்கப்படாது...தொத்திலை முதலாம் பிள்ளை ரண்டாம் பிள்ளை போட்டுக்கொண்டிருந்தினம்... இப்பப் பாருங்கோவன்?" எண்டு நான் சொன்னதுக்குத் தம்பர் "அதென்ன கதிரேசண்ணை வகுப்பிலை நிப்போட்டிலை போடுகிற முதலாம் பிள்ளை ரண்டாம் பிள்ளை எண்டிறியள்?" எண்டு கேட்டார்.

"எட.. தம்பு முதலாம் தொடர்பாளர் ரண்டாம் தொடர்பாளர் எண்டு சொல்லி எல்லாரையும் ஊர் முழுக்கத் திரியவிட்டிட்டு இப்ப முழுசுறதைச் சொல்லுறார்..." எண்டு மணியத்தார் சொல்லிப்போட்டு, "உதுகளுக்குள்ளை நிறையப் பீத்தலுகள் கண்டியளோ? அறிகுறியில்லாத தொத்தாளர்... வெளிப்படச் சோதிக்காத தொத்தாளர்...தனிமைப்படுத்தாத ரண்டாம் மூண்டாம் தொடர்பாளர் எண்டு சொல்லி ஒரு தொகைப் பேர் உலாவுகினமில்லே?" எண்டார் சம்பர்.

"எடப்பா உதுகளைச் சொல்ல அவங்களுக்கு விளங்குதில்லைக் கண்டியளோ? அப்பிடியெண்டால் முழுசாய் முடக்குறதோ? எண்டல்லே கேக்கிறாங்கள். மண்டபங்களிலை கலியாணக் கொண்டாட்டங்களை நிப்பாட்டி வீடுகளிலை அளவான ஆக்களோடை செய்யுங்கோ எண்டு சொல்லுற அளவுக்குத்தான் அவங்கடை அறிவு கிடக்குதுபோல. மண்டபங்கள் பொது இடங்களிலை கண்காணிக்கிற வசதியளோடை கிடக்க அதை விட்டிட்டு ஊருக்குள்ள மூடின பந்தலுக்குள்ள கூடிக் கும்மியடிக்கிறதை ஆதரிக்கிறாங்கள். ஒரு-விதமான பாதுகாப்போ கண்காணிப்புகளோ இல்லை..." எண்டு நிப்பாட்டினன்.


"உது.. உதெண்டாச் சரிதான் கதிரேசண்ணை.. கலியாண வீடுகள் செத்த வீடுகள் பள்ளிக் கூடங்களை விட்டாலும் அடைஞ்சு வைச்சுப் படிப்பிக்கிற ரியூசனுகள் எண்டு எல்லாந்தானே நடக்குது..."



எண்டு இழுத்தார் தம்பர். "அதோடை, உதோடை வாழப் பழக வேணு மெண்டில்லே சொல்லுகினம்" எண்டும் சொன்னார்.

"ஒண்டு சொல்லட்டே...உந்த வாழப் பழகிற கதை கதைக்கிறவை அங்கை பெருகுது அதுக்குள்ளை இதுக்குள்ளை எண்டு பேக்கதையள் கதைச்சு கரைச்சல் குடுக்கக்கூடாது..." வரட்டே எண்டபடி வந்திட்டன்.

# சாத்தான் பாதணி!





மனிதக் குருதியையும் சேர்த்துச் செய்த சாத்தான் பாதணிகளால் வெடித்திருக்கிறது சர்ச்சை. உலகப் புகழ்பெற்ற நைக் பாதணிகளில் சிறு வடிவமைப்பு மாறுதலைச் செய்து இந்த சாத்தான் பாதணி உருவாக்கப்பட்டிருக்கின்றது.

நைக் எயார் மக்ஸ் 97 ரக பாதணிகளின் அடிப்பகுதியில் காற்றுக்குமிழிகள் நிறைக்கப்பட்ட இடத்தில் வர்ணப் பூச்சோடு சேர்த்து குருதித் துளிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன இந்த புதிய பாதணி. வெறும் ஒரு சொட்டுக் குருதிதான் என்று எம்.எஸ்.எச்.எவ் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர். வேடிக்கை விநோதப் பொருள்களை உருவாக்குவதில் பெயர் பெற்றது இந்த நிறுவனம்.

தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் 6 பேரின் குருதித் துளிகளே பாதணிகளின் உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஒரு சோடி பாதணிகளின் விலை ஆயிரத்து 18 அமெரிக்க டொலர். திங்கட்கிழமை அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நிமிடத்திற்குள் அனைத்துப் பாதணிகளும் விற்றுத் தீர்த்துவிட்டன என்று அறிவித்திருக்கின்றது நிறுவனம்.

666 இணை பாதணி என்கிற பெயரில் உருவாக்கப்பட்ட இதில் தலைகீழான சிலுவைச் சின்னம், பென்டாகிராம் எனப்படும் நட்சத்திரக் குறி, லூக் 10:18 என்கிற சொல் போன்றவைகள் இடம் பெற்றுள்ளன. ராப் பாடகர் லில் நாஸ் எக்ஸ் உடன் இணைந்து இந்தப் பாதணியை அந்த நிறுவனம் வெளியிட்டது. தொண்டு நிறுவனத் தேவைக்காகவே இவ்வாறு செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனம் என்னவோ இதனை யேசுவின் பாதணி என்கிற பெயரில்தான் அறிமுகப்படுத்தியது எனினும் இதனை சாத்தான் பாதணி என்று விமர்சித்திருக்கிறது நைக் நிறுவனம். இந்தப் மறுசீரமைக்கப்பட்ட பாதணிக்கும் தனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அறிவித்திருக்கும் நைக், எம்எஸ்சிஎச்எவ் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுத்துள்ளது. தமது வர்த்தக நாமத்திற்கு களங்கத்தை ஏற்படுத்துவதுடன், பாதணி உருவாக்கத்தில் தமக்கு தொடர்பு இருப்பது போன்ற போலியான தோற்றப்பாட்டையும் அது ஏற்படுத்தியிருப்பதாகவும் அது கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பெரும் தலைவர்களுமற்ற முக்கிய தேர்தல் தமிழகத்தில்


ஜெயலலிதா

தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் வாக்களிப்பு வரும் செவ்வாய்க்கிழமை நடக்கிறது. முத்துவேல் கருணாநிதி இல்லாமல் திராவிடர் முன்னேற்றக் கழகமும் ஜெயலலிதா இல்லாமல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முதல் தடவையாகத் தேர்தலைச் சந்திக்கும் தருணம் இது.

கருணாநிதியும் ஜெயலலிதாவும் அரசியலில் இரு பெரும் ஆளுமைகளாக இருந்தவர்கள். இலக்கியம் முதல் சமூக நீதி வரையும் தமிழ் நாட்டில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர் கலைஞர் கருணாநிதி. அவரோடு ஒப்பிடும்போது எழுதி வைத்ததைக் கூடச் சரியாகப் படிக்க முடியாதவர் என்று எள்ளி நகையாடப்படும் ஒரு தலைவராக இருக்கிறார் மு.க.ஸ்டாலின். தன் பெயரில் மிகப் பெரும் ஆளுமையை வைத்துக் கொண்டாலும், தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பதைப் போன்றல்லாமல் தன்னுடைய தலைமைத்துவ ஆளுமையை வெளிப்படுத்துவதற்குத் திணறி வருகின்றார் அவர். அண்மைக் காலத்தில் அவரளவிற்கு சமூக ஊடகங்களில் எள்ளி நகையாடப்பட்ட தலைவர் வேறு யாரும் கிடையாது.

மறுபுறத்தில் சந்தர்ப்ப வசத்தால் முதலமைச்சர் பதவியைப் பிடித்துக்கொண்ட அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமியும் ஸ்டாலினுக்கு சற்றும் குறைவில்லாமல் விமர்சிக்கப்பட்ட தலைவர்தான். அவர் ஓர் அரசியல் அடிமை என்பதும், நடுவண் அரசான மோடியின் ஆட்சியின் கைப்பொம்மை என்பதும் அவர் மீதான கடுமையான விமர்சனங்கள். மாநிலங்களின் சுயாட்சி உரிமைகளை நடுவண் அரசு பறிக்கும்போதெல்லாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காதவர் என்கிற பழிச்சொல்லுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்.

தமிழகம் இப்படியொரு சட்டமன்றத் தேர்தலை இதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை என்கின்றது ஆனந்த விகடன் வார இதழ்.

புதிதாகக் களத்துக்கு வந்திருக்கும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மக்கள் நீதி மய்யம் கட்சிகளின் தாக்கம் தேர்தல் களத்தை இன்னும் சூடேற்றி வைத்திருக்கிறது. மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி, டி.டி.வி.தினகரன், கமல்ஹாசன், சீமான் என ஐந்து முதல்வர் வேட்பாளர்கள் தமிழகத்தின் குறுக்கும் நெடுக்குமாக வலம்வந்து தீவிரமாகப் பரப்புரை செய்கிறார் கள்.

கடந்த 10 வருடங்களாக அதிமுக ஆட்சியில் இருந்து வந்த நிலையில் மாற்றம் ஒன்று வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் பரவலாக இருப்பதாக இது வரை வெளியான ஊடகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. திமுகவே இந்த முறை ஆட்சியைப் பிடிக்கும் என்பதே பெரும்பான்மையான கருத்துக் கணிப்புக்களின் முடிவுகளாக இருக்கின்றன. ஆனால் இந்தியத் தேர்தல் களங்களில் இதற்கு முன்னர் பல தடவைகள் ஊடகங்களின் கருத்துக் கணிப்புக்கு முற்றறிலும் மாறாகப் பல தடவைகள் தேர்தல் முடிவுகள் வெளியாகி இருக்கின்றன.






தமிழ்நாடு சட்டமன்றத்தில் 234 இருக்கைகள் உள்ளன. அவற்றில் 150 ஆசனங்களுக்கும் மேலானவற்றை திமுக கூட்டணி கைப்பற்றும் என்றும் 50 வரையான ஆசனங்களை அதிமுக கூட்டணி கைப்பற்றும் என்றும் மக்கள் நீதி மய்யம், அமமுக, நாம் தமிழர் கட்சி ஆகியன கணிசமான வாக்குகளைப் பெற்றாலும் அவற்றுக்கு ஒன்று அல்லது இல்லை என்கிற நிலையிலேயே ஆசனங்கள் கிடைக்கும் என்றும் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

நடுவண் ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து மதம் சார்ந்த கொள்கைக்கு எதிரான அலை தமிழ்நாட்டில் அதிகம் இருப்பதால் அது சேர்ந்திருக்கும் அதிமுக கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டும் என்கிற உணர்வலை தீவிரமாக இருக்கின்றது என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கருணாநிதிக்குப் பின்னரான கள நிலவரத்தில் தன்னைத் தலைவராக நிரூபிக்கவேண்டிய தேவை மு.க.ஸ்டாலினுக்கு இருப்பதால் அவர் தமிழ்நாடு முழுவதும் தீவிரமாகச் சுற்றுப் பயணம் செய்து வருகின்றார். ஆனாலும் அவரது மகன் உதயநிதியையும் இந்தத் தேர்தல் களத்தில் அவர் இறக்கியிருப்பது வாரிசு அரசியல் என்கிற கடுமையான விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கட்சியை ஒரு குடும்பமே ஆளும் இந்த முயற்சி பல்வேறு எதிர்ப்புக்களைக் கிளப்பினாலும் பாஜக மீதான வெறுப்பு மற்றும் எதிர்ப்பு அதனை ஈடுசெய்துவிடுகின்றது என்கிறார்கள் விமர்சகர்கள்.

அதிமுக கட்சித் தலைமைக்கான இழுபறி தொடர்ந்துகொண்டே இருப்பது, சிறையிலிருந்து சசிகலா திரும்பியிருப்பது, அமமுக தனித்துப் போட்டியிடுவது ஆகிய விடயங்கள் அந்தக் கூட்டணிக்குச் சாதகமற்ற நிலமையை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தச் சவால்க ளைத் தாண்டி மக்களைக் கவரக்கூடிய ஒற்றைத் தலைவரை அந்தக் கட்சி கொண்டிருக்காதது அதனது மற்றொரு பலவீனம்.

அதிமுக 10 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் இருந்துவிட்ட நிலையில் இந்த முறை ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படும் என்றே எதிர்வுகூறப்படுகின்றது.

**இது வரை வெளியான ஊடகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. திமுகவே இந்த முறை ஆட்சியைப் பிடிக்கும் என்பதே பெரும்பான்மையான கருத்துக் கணிப்புக்களின் முடிவுகளாக இருக்கின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மவூர் சுத்துமாத்து...!



வவுனிக்குளத்திலிருந்து காந்தன்

# மோட்டார் சைக்கிள் திருடர்கள்...!

ஒரு நண்பரின் திருமணப் பொருத்தம் தொடர்பாகக் கதைத்து முடிவெடுப்பதற்காக நானும் ஏனைய இரண்டு நண்பர்களும் விசுவமடுவிலுள்ள பெண் வீட்டுக்கு மோட்டார் சைக்கிள்களில் சென்றோம். அந்த விடயத்தை முடித்துவிட்டுப் பகல் உணவுக்காக விசுவமடுவிலுள்ள ஒரு கடையில் சாப்பிட முடிவெடுத்து எமது மோட்டார் சைக்கிள்களைக் கடைக்கு முன்னால் நிறுத்திவிட்டு உள்ளே சென்று சாப்பிட்டோம்.

உணவருந்தி முடித்து வெளியே வந்து பார்த்தபோது நண்பரின் மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. அது புதியது. இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் வாங்கியது. அருகிலுள்ள எல்லா இடங்களிலும் அதைத் தேடினோம். கிடைக்கவேயில்லை.

புதிய மோட்டார் சைக்கிள் என்பதால் நண்பரைச் சமாளிப்பது சிரமமாக இருந்தது. அங்கு நின்ற ஒருவர் கூறினார், "மாணிக்கபுரம் என்ற இடத்தில் ஒரு சாத்திரி இருக்கிறார், அவரிடம் போய் குறி பார்த்து அறியலாம்" என்று. மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவருக்கு இதில் நம்பிக்கை இல்லை. அவர் அங்கு வர மறுத்துவிட்டார். நான் வலுக்கட்டாயமாக அவரை இழுத்துக் கொண்டு போனேன்.

அங்கு குறி சொல்லும் பூசாரி ஒருவர் இருந்தார். நானும் நண்பரும் அவருக்கு முன் அமர்ந்தோம். அவர் கற்பூரத்தைக் கொழுத்திக் கண்ணை மூடி ஏதோ மந்திரங்களை உச்சரித்தார். பின்னர் கண்விழித்து "ஒரு பொருளைத் துலைத்துவிட்டு வந்திருக்கிறீர்கள்." என்றார். எனக்குத் திருப்தியாக இருந்தது. நானே பதிலளித்தேன், "ஓம் ஐயா" என்றேன். விடயத்தைச் சரியாகக் கண்டுபிடித்ததை நினைத்து அவர் சிரித்தார்.

பின்னர் சற்றுநேரம் கண்ணைமூடி ஏதோ மந்திரத்தை உச்சரித்துவிட்டு "ஒரு ஆற்றைக் கடந்து வந்தானிங்களோ" என்றார். நானும் சற்று யோசித்துவிட்டு நெத்தலியாற்றைக் கடந்து வந்த ஞாபகம் வர ஓம் என்றேன். மீண்டும் கண்ணை மூடி ஏதோ மந்திரங்கள் சொல்லிவிட்டு, "நீங்கள் தொலைத்த பொருள் சருகுக்குள் விழுந்து கிடக்கிறது" என்றார். "அந்தப் பெறுமதி யான சங்கிலி உங்களுக்குக் கிடைக்கும்" என்றார்.

மோட்டார் சைக்கிளைத் தொலைத்த நண்பர் என்னை முறைத்துப்பார்த்தார். "எனது சங்கிலி தொலையவில்லை. புது மோட்டார் சைக்கிள்தான் தொலைந்தது. இப்படிப் பொய் சொல்லி யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்...?" என்று குறி சொன்னவருக்குக் கடும் குரலில் பேசினார். அங்கு குறி பார்க்க வந்திருந்த ஏனையவர்களுக்கும் குழப்பம் உண்டாகிற்று.

நான் நண்பரைச் சமாதானப்படுத்த அவன் என்னைப் பேசினான். உடனே குறி சொன்னவர் மயக்கம் போட்டு விழுந்தது போல நடித்தார். அந்தாப் பூசாரிக்கு உதவியாக நின்றவர்கள் நண்பரைப் பேசினார்கள். "தெய்வக் குற்றம் நடந்துவிட்டது அதனால் தான் சாமி மயக்கம்போட்டு விழுந்து விட்டார்" என்று புதுக் கதையும் சொன்னார் கள். நானும் சேர்ந்து அவர்களைப் பேசிவிட்டு வெளியேறிக் காவல் துறைக்குச் சென்று முறைப்பர்டு செய்தோம்.

ஒரு மாதத்தின் பின்னர் ஒரு கள்வனைப் பிடித்ததில் எங்கள் மோட்டார் சைக்கிளும் அகப்பட்டது. ஆனால் அந்தச் சைக்கிளில் இருந்த அரைவாசி உதிரிப்பாகங்களைக் கழற்றி அவன் விற்றுவிட்டான். இப்படியான பல சுத்துமாத்துகள் எங்கள் சமூகத்தில் பல காலமாக நடந்தேறி வருகின்றன.

## இந்த வார சுடோக்கு - 32

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | 9 | | 2 | |
| | | 9 | 2 | 1 | 6 | | | 5 |
| 5 | | | 8 | | 4 | | | |
| | 6 | | | | | 4 | | |
| 3 | 7 | | | 4 | | | 6 | 1 |
| | | 2 | | | | | 5 | |
| | | | 9 | | 7 | | | 3 |
| 7 | | | 3 | 8 | 5 | 2 | | |
| | 3 | | 4 | | 1 | | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஓரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
*சுடோக்கு,*
**551 A,** *கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 3 | 2 | 4 | 1 | 6 | 9 | 7 |
| 9 | 4 | 2 | 6 | 5 | 7 | 8 | 1 | 3 |
| 1 | 7 | 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 5 |
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 1 | 3 | 8 |
| 2 | 3 | 4 | 8 | 1 | 5 | 9 | 7 | 6 |
| 7 | 8 | 1 | 3 | 6 | 9 | 4 | 5 | 2 |
| 6 | 9 | 7 | 5 | 2 | 4 | 3 | 8 | 1 |
| 4 | 2 | 5 | 1 | 3 | 8 | 7 | 6 | 9 |
| 3 | 1 | 8 | 7 | 9 | 6 | 5 | 2 | 4 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.*

# மம்மிகள் வேலையைக் காட்டுகின்றன!

சுயஸ் கால்வாயில் எவர் கிவன் கப்பல் இடக்கு முடக்காகச் சிக்கிக்கொண்டதற்கு எகிப்தில் உள்ள மம்மிகளின் சாபம்தான் என்ற கட்டுக்கதை சமூக வலைதளங்களில் திடீரென காற்றுவேகத்தில் பரவி வருகிறது.

பங்குனி 23ஆம் நாள் சீனாவில் இருந்து நெதர்லாந்து நோக்கி சென்ற எவர் கிவன் கப்பல் சூயஸ் கால்வாயில் சிக்கித் குறுக்காகத் தரைதட்டி நின்றது. சுமார் 20,000 கொள்கலன்களை ஏற்றி சென்ற இந்தக் கப்பல் சுயஸ் கால்வாயில் குறுக்காக நின்றதால் அவ்வழியாக செல்லும் நூற்றுக்கணக்கான கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் உலக அளவில் கோடிக்கணக்கில் வர்த்தக இழப்பும் ஏற்பட்டது. பின்னர், ஒருவார கால முயற்சிக்குப் பிறகு சுயஸ் கால்வாயில் சிக்கிய கப்பல் மீட்கப்பட்டது. நிலைமையும் சீரானது.

இந்த நிலையில் சுயஸ் கால்வாயில் கப்பல் சிக்கியதற்கு எகிப்தில் உள்ள மம்மிகளின் சாபமே காரணம் என்ற செய்தி சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

சுயஸ் கால்வாய் மட்டுமின்றி எகிப்தில் அண்மையில் நடைபெற்ற வேறு சில அசம்பாவிதங்களுக்கும் பார்வோன்கள் என்றழைக்கப்படும் மம்மிகளின் சாபமே காராணமாகும் என்கிறது அந்தத் தகவல். காரணம், எகிப்து தலைநகர் கெய்ரோவின் தஃரிர் **(Tahrir)** சதுக்கத்தில் உள்ள மம்மிகளின் அருங்காட்சியகத்தில் உள்ள மம்மிகள் புஸ்டட் **(Fustat)** பகுதியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்திற்கு சித்திரை 3ஆம் நாள் மாற்றப்பட உள்ளன. இந்த அருங்காட்சியகத்திற்கு இரண்டாம் மன்னர் ராம்செஸ் மற்றும் ராணி அஹ்மோஸ்- நஃபெர்தாரி **(Ahmose-Nefertari)** யின் மம்மிகளும் மாற்றப்பட உள்ளன.

இந்த நிலையில் ஓரிடத்தில் உள்ள மம்மிகளை வேறு ஓரிடத்திற்கு மாற்றுவதால் ஏற்படும் சாபத்தால்தான் எகிப்தில் ஆபத்துகள் ஏற்படுவதாக கட்டுக்கதை பரவத் தொடங்கியுள்ளது. எகிப்தில் அண்மையில் இரண்டு தொடரிகள் (ரயில்கள்) மோதிக்கொண்டதில் 22 பேரும், கெய்ரோவில் ஒரு கட்டடம் இடிந்து விழுந்ததில் 23 பேரும் உயிரிழந்தனர். தற்பொழுது சூயஸ் கால்வாயில் பிரமாண்ட கப்பல் சிக்கியது. இதுபோன்ற துயர சம்பவங்களுக்கு மம்மிகளின் சாபமே காரணம் என்று சிலர் டிவிட்டரில் கருத்துப் பதிவிட்டு வருகின்றனர். மேலும், "மன்னரின் அமைதியை குலைத்தால் இறப்பு வந்து சேரும்" என்ற கருத்துக்களும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இத்தகைய கருத்திற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கும் எகிப்து தொல்லியல்துறை வரலாற்று ஆசிரியர்கள், பார்வோன்களின் வரலாற்றுக்கு ஏற்ற இடத்திற்கு மம்மிகள் மாற்றப்படுவதால் அவற்றிற்கு மரியாதை ஏற்படுமே தவிர, சாபம் ஏற்படாது எனக் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு


தமிழர் பாரம்பரியத்தில் உடலை யோக நிலையில் பேண உணவுப் பழக்கங்களும், சுவாசப் பயிற்சிகளும் உதவின. இவை உடல், உள, ஆன்மீக, சமூக ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக அமைந்தன. பொதுவாக உணவே மருந்தாக அமைந்துள்ளமையை திருவள்ளுவர் தெளிவாகத் திருக்குறளில் எடுத்துக் காட்டுகின்றார்.

ஒருவர் அனுபவ ரீதியாக அறிந்த உணவுகளை உண்ணல் வேண்டும். தெரியாத உணவுகளை உண்ணுதல் ஆகாது. தூய்மையான உணவுகளை உண்பதனால் நோய்கள் ஏற்படாது எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**''மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.''** (942)

மேலும் நாம் உண்ணும் உணவில் போசணைப் பெறுமானங்களின் அளவு குறைந்தாலும் நோய் வரும். இதனை இன்று மந்த போசணை என்கின்றோம். அதேபோல் அதிகளவு மாப் பொருள், கொழுப்பு என்ப வற்றை எடுக்கும் போதும், உடற்பருமன் அதிகரிப்பு, சலரோகம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றை அல்லூட்டம் என்கின்றோம். இதனைத் திரு வள்ளு வர் அன்று கூறியமை நோக்கத் தக்கது.

**''மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.''** (941)



**மருத்துவர். சி. யமுனாநந்தா**

**''அற்றது அறிந்து கடைப் பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து''** (944)

மிகப் பசித்து உணவு உண்ணும்போது உடலில் நோய் ஏற்படாது. இது உடற்பருமனைக் கட்டுப்படுத்தும். அனுசேப நோய்கள் ஏற்படாது. நீரிழிவு நோய் உருவாதலைத் தவிர்க்கும். மேலும் முதலில் அதிகமாக உணவை உண்டால் பின்னர் உணவைக் குறைக்குமாறு திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனையே உடற்பருமனுள்ள வர்களுக்குத் தற்போது நாம் கூறும் உணவுக் கட்டுப்பாடு எனும் மருத்துவ ஆலோசனை ஆகும்.

**''அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு''** (943)

இன்று விதம் விதமான உணவுகளை மக்கள் உண்கின்றனர். கொக்காகோலோ, கேஎப்சி, பீஸா, கிரில் எனும் சுட்ட இறைச்சி மற்றும் பலவிதமான இனிப்புப் பண்டங்களும், நாகரீக மோகத்துடன் உண்ணப்படுகின்றன. தமிழர்களின் தொன்மையான உணவுப் பாரம்பரியங்கள் பழக்கத்தில் இருந்து விலகுகின்றன. இதனால் பல நோய்கள் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

**''மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு''** (945)

அளவோடு உணவை உண்டால் நோய் வராது. உணவைப் பக்குவப்படுத்துவதில் அளவுப் பிரமாணம் அவசியமானது. இன்று பணமிகுதி உடையோர் அதிக அளவில் உணவை உண்கின்றனர். விருந்துகள் வைத்து தமக்கு வேண்டிய ஏனையவர்களையும் அதிக உணவை உண்ணும் பாரம்பரியத்தை ஏற்படுத்தி நோய் நிலைக்கு ஆளாக்குகின்றனர்.

திருமண மண்டபங்களில் தாராளமாக வழங்கப்படும் குளிர்களி, குளிர்பானங்கள், பாயாசம் என்பன இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. அவ்வாறே அலுவலகங்கள், நண்பர் கூழாம்களின் விருந்துகளும். இதனால் நோய் ஏற்படும் என்பதனைத் திருக்குறளில் காணலாம். இதனை இன்றைய மருத்துவமும் ஆதாரமாகக் கூறுகின்றது.

**''இழிவறிந்துண்பான் கண் இன்பம் போல் நிற்கும்**
**கழிபேர் இரையான் கண் நோய்.''** (946)

எனவே உணவை அளவோடு உண்ணல் இன்பமானதாகவும், நோய் ஏற்படாத தன்மையதாகவும் இருக்கும். ஒருவன் தனது தேவை தெரியாது அதிக அளவு உணவை உண்ணும்போது நோய் நிலைக்கு ஆளாகின்றான். இதனால் இன்று வைத்தியசாலைகளில் போசணை ஆலோசனைச் சிகிச்சை நிலையங்கள் அமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர்.

**''தீயளவன்றித் தெரியான் பெரி துண்ணின்**
**நோயள வின்றிப்படும்''** (947)

நோயினைத் தவிர்க்கும் வாய் நாடி என்பது நாம் உண்ணும் உணவில் இருந்தே தொடங்குகின்றது. உணவுப்பழக்கம், மருத்துவக் குணமுடைய மூலிகைகளின் பாவனை என்பன தமிழ் பாரம்பரிய மருத்துவத்தில் முதன்மையானது.

**''நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல்''.** (948)

மருத்துவத்தின் அறிவியல் அணுகுமுறையைத் திருக்குறள் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பே கூறியுள்ளது. இது தமிழரின் நாகரிகத்திற்கு ஓர் ஆழமான எடுத்துக்காட்டாகும்.

தற்போது கொரோனாத் தொற்றால் உலகம் பயந்துள்ள நிலையில் மருத்துவச் சேவை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை திருவள்ளுவர் சிறப்பாகக் கூறியுள்ளார்.

**''உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்''** (949)

நோய் உள்ளவர்கள் எண்ணிக்கை, நோயின் தன்மை மற்றும் குறித்த அளவு காலம் என்பன கருதி மருத்துவ சிகிச்சை நிர்ணயம் செய்யப்படும். மேலும் நோயுற்றவன், மருத்துவன், நோய்க்கான மருந்து, மருந்தினை நோயாளிக்கு நேரம் தவறாது வழங்குபவர் என நான்கும் நோய் குணப்படுத்தலில் உதவும்.

**''உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வா னென்று**
**அப்பால் நாற்கூற்றே மருந்து''** (950)

தமிழர் பாரம்பரியத்தில் உணவுப் பழக்கவழக்கங்கள் நோயினை வராது காத்தது. உணவேதான் மருந்தாக இருந்தது. அவ்வகையில் இல்லாளின் சமையல் சிறப்பே நோயற்ற வாழ்வுக்கான சிறந்த வழியாக அமையும் என்பதனையும் திருவள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். ''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு''.

" தமிழர்களின் தொன்மையான உணவுப் பாரம்பரியங்கள் பழக்கத்தில் இருந்து விலகுகின்றன. இதனால் பல நோய்கள் வரும் நிலை ஏற்பட்டுள்ளது "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்களுக்கு உதவிய மோடி!

தமிழ்நாடு தேர்தல் களத்தில் பரப்புரைப் பரபரப்புகளுக்கு நடுவே நகைச்சுவைக்கும் குறைவில்லை. அண்ணா திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியில் போட்டியிடுகின்றது நடுவண் ஆட்சியைக் கைவசம் வைத்துள்ள மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி. அந்தக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் நடிகை குஷ்பு உட்பட நடிகைகள் சிலர் போட்டியிடுகின்றனர். அதேநேரம் அந்தக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக நடிகை நமீதா பரப்புரையிலும் ஈடுபட்டு வருகின்றார்.


ஒரு பரப்புரைக் கூட்டத்தில் பேசிய நடிகை நமீதா முத்ரா திட்டத்தின் மூலம் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி நிறைய பேய்களுக்கும் உதவி செய்தார் என்று கூறித் திகைக்க வைத்தார்.

சிவகங்கையில் பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளர் எச்.ராஜாவை ஆதரித்து நடந்த பரப்புரையிலேயே அவர் இந்தப் பரபரப்பைக் கிளப்பினார். சும்மா ஆடிக்கொண்டும், பாடிக் கொண்டும் சென்று விடக் கூடாது என்பதை உணர்ந்து, கருத்தாக என்ன பேச வேண்டும் என்பதை தங்லீஸ் மொழியில் அவரிடம் எழுதிக்கொடுத்திருந்தனர்.

தன்னம்பிக்கையுடன் உரையை படிக்க தொடங்கிய நமீதா, "மோடி முத்ரா திட்டம் உங்களுக்காக கொண்டி வந்து மூலம் நிறைய "பேய்ங்களுக்கு உதவி செய்தார்" என்று கூறி அதிர வைத்தார்

"தாமரைக்கு ஓட் போட்ரதுனாலே, மாசத்துக்கும் குடும்பத்துக்கும் தலைவிக்கு 1500 ரூபாய் கொடுக்க போறேன், அது கூட இலவசமா..! மற்றும் வருசத்துக்கு ஆறு கேஸ் சிலிண்டர்ஸ் கொடுக்கபோறேன் .. அது கூட இலவசமாய்" என்றார்

நமீதாவின் நாவில் நற்றமிழ் நழுவியது. மோடி நிறையப் பேர்களுக்கு உதவினார் என்பதையே நமீதா பேய்களுக்கு உதவினார் என்று மாற்றிவிட்டார்.





# சம்பந்தர் கடையடிச் சமா...

"சும்மா சொல்லப்படாது, சொந்தக் கட்சியா இருந்தாலும் ஆர் இப்பிடியெல்லாம் கட்சிக்காககக் காசு செலவழிக்கினம்? மற்றக் கட்சிகளின்ர தலைமைகள் எல்லாம் கட்சிக் காசில கனடாக்குப் போறதும், அங்க சேர்த்த காசில பங்களா கட்டுறதுமா இருக்கேக்க... இங்க அந்தாள் தன்ர சொந்தக் காசைச் செலவழிச்சு கட்சிக்காக வழக்கு நடத்துதெண்டா சும்மாவே?" எடுத்து விட்டபடி கடையடிக்குப் போய் இறங்கினன்.

"என்னண்ண சொல்லுறாய், கட்சிக்காகச் சொந்தக் காசில வழக்கு நடத்துறது ஆரண்ணே?" எண்டான் சுப்பன்.

"அது தான் தம்பி மூத்த - புகழ் பூத்த அப்புக்காத்தர்ட பேரன், தன்ர பேரன்ர கட்சியைக் கட்டிக் காப்பாத்தவேணும் எண்டதுக்காக அதே கட்சி உறுப்பினர்களை வெளியில விடுறதுக்காக இண்டைக்கு வரைக்கும் பலப் பல லட்சங்கள் செலவழிச்சுப் போட்டாராம்...... வழக்கை எடுக்க முடியாது எண்டு மாகாண மேல் நீதிமன்றம் தள்ளிப் போட்டுது... ஆனாலும் பேரப்பிள்ளை விடன் எண்டு நிக்கிறார்.... கொழும்பில கொண்டு போய் உச்ச நீதிமன்றத்தில சிங்கள லோயர்மாரைக் கொண்டு வழக்காடி உண்டு, இல்லையெண்டாம விடமாட்டன் எண்டு நிக்கிறாராம்....."

"என்னண்ண சொல்லுறாய்.... தள்ளின வழக்கை திரும் எடுக்கப் போகினமோ.... கொழும்பிலயோ.... அதுவும் சிங்கள லோயர்மாரை வைச்சோ.... ஏனண்ணை இவையின்ர கட்சியில முக்கால்வாசி லோயர்மார்தானே... அவையள் ஒருத்தராலும் ஏலாமப் போச்சோ....." கேள்வியளை அடுக்கிக் கொண்டே போனான் சுப்பன்.

"இல்லைத் தம்பிமார்... தன்ர கட்சியால உள்ளூராட்சி சபையளுக்குப் போன ஆறு பேர் தங்களுக்கு எதிராகக் கெம்புகினம் எண்டதும் நிப்பாட்டிப் போட்டு, அவையளை உள்ளூராட்சி மன்றங்களில இருந்தும் அனுப்ப வேணும் எண்டு இவையள் அலுவல் பாக்க.... இவையள் நிப்பாட்டினது பிழை.... அதால வழக்கு முடியும் மட்டும் எங்கள உள்ளூராட்சி மன்றங்களில இருந்து நிப்பாட்ட விடக்கூடாது எண்டு அவையள் இடைக்காலத் தடை கேக்க... நீதிமன்றமும் அது சரி.... வழக்கு முடியும் மட்டும் அவையளை நிப்பாட்ட வேணாம் எண்டு இடைக்காலத் தடை ஒண்டைக் குடுத்தது தானே....

அந்த இடைக்காலத் தடையை நீக்கச் சொல்லி... இவை மாகாண நீதிமன்றில வழக்குப் போட்டவை.... இவையளுக்காக வாதாட லோக்கல் வக்கீல்மார் ஒருத்தரையும் பிடிக்காம..... கொழும்பில இருந்தெல்லே கூட்டிக்கொண்டு வந்தவை.... கொழும்பில இருந்து வந்தவைக்கு வழக்குக் காசு... சாப்பாடு... போக்குவரத்துக்கெண்டு இதுவரைக்கும் அரைக் கோடிக்கும் மேல செலவாம் எண்டு கட்சி ஆள் ஒருத்தர் சொன்னார். இப்ப வழக்கே செல்லாது எண்டு தள்ளுப்பட்டுப் போச்சுது.... அதை விடமாட்டம் எண்டு கொழும்பில உச்ச நீதி மன்றத்துக்கு போகப் போகினம்......

இதுக்குள்ள உனக்கொண்டு தெரியுமே.... மணி கொரோனா வந்து ஆஸ்பத்திரியில எல்லோ.... போன 31 ஆம் திகதி வழக்குக்கு வராம பிற்போடுறதுக்காகத்தான் அவர் கொரோனா வந்த மாதிரி ஆஸ்பத்திரிக்குப் போயிற்றான் எண்டு கஜாக்களுக்கு குடை பிடிக்கிற ஒரு தம்பி தன்ர முகப் புத்தகத்தில போட்டிருக்குது.... அடேயப்பா.... கொரோனா எண்டு ஆரும் பொய் சொல்லுவாங்களே.... அதுவும் இத்தினை சோதினையள் கஸ்டங்கள் இருக்க... ஒராள் சும்மா வழக்குக்கு ஒளிக்கிறதுக்காகப் பொய் சொல்லிப் போய் வார்ட்டில படுக்க ஏலுமே? இந்தளவு தான் அறிவு...

இப்ப என்ன பிரச்சினை எண்டா.... பாட்டன் முப்பாட்டன் காலத்தில இருந்து சேர்த்து வைச்ச சொத்து அவளவும் அழிஞ்சாலும் பரவாயில்லை.... எங்களுக்குச் சவால் விட்டுக் கொண்டு மேயர் கதிரையைப் பிடிச்ச மணியை அதில இருந்து இறக்காம விடமாட்டம் எண்டு ரெண்டு கஜாக்களும் மும்முரமா நிக்கினமமாம். அதுக்காக பெரிய கஜான்ர காசுதான் கரையுது. பாப்பம் பொறுத்திருப்பம்.... என்ன நடக்குது எண்டு.."

"அண்ணை, அப்பிடியெண்டா... கொழும்பு கேசில... கஜாக்களுக்கு வெற்றி எண்டா... மணி வீட்டை போக வேண்டியதுதானோ?"

"ஓமடாப்பா.... அப்பிடித்தான் சொல்லுறாங்கள்... மணி மட்டுமில்லை..... மாநகர சபையே இருக்காது எண்டுறாங்கள்.... எந்தவொரு சபையிலயும், ரெண்டாந்தரம் வாற மேயர் பதவி இழக்க வேண்டி வந்தா இந்தச் சபை உடனடியாக் கலைக்கப்பட்டு, ஆணையாளரின்ர கையில அதிகாரம் போகுமாம்.....

என்ன நடக்குதெண்டு பொறுத்திருந்து தான் பாப்பமே...."

- ஆதிரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முள்ளங்கி வறை....!

மிக மிக அருந்தலாக நம்மவர்கள் சமைக்கின்ற கிழங்கு வகை முள்ளங்கி. கரட்டைப் போல, மரவள்ளியைப் போல மண்ணில் விளைகின்ற கிழங்கே முள்ளங்கி. ஆனால், கரட்டைப் போலவோ, மரவள்ளிக் கிழங்கைப்போலவோ கிழங்கை மாத்திரமல்லாமல் இதன் இலையையும் சமைத்துண்கிறார்கள். அதற்குக் காரணம் இதில் மருத்துவத்தன்மை நிறைந்திருப்பதே.

நம்மவர்கள் மத்தியில் மற்றைய மரக்கறிகளைப்போல இதன் பயன் பாடு இல்லாவிடினும் ஆங்காங்கே ஒருசிலர் இதைச் சமைத்துண்கிறார்கள். அவர்கள் யாராக இருப்பர் என்று தேடினால், நிச்சயம் இதன் மருத்துவத் தன்மை அறிந்தவர்களாகவும் இதன் மருத்துவக் குணங்கள் தேவையுடைய வர்களாகவுமே இருப்பார்கள்.



இதை உட்கொண்டால் உடல் முழுவதும் சுத்தமான குருதி எப்போதும் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் என்கிறார்கள் சிலர். முள்ளங்கிக் கிழங்கில் ஈரப்பதம், மாச்சத்து, புரதம், கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து, விற்றமி சி, பி, இரும்புச் சத்து, கல்சியம், பொஸ்பரஸ் எனப் பல ஊட்டங்கள் இருக்கின்றன என்று அறியப்பட்டுள் ளது.

முள்ளங்கியில் அதிக நோய் எதிர்ப்பு சக்தி உள்ளதாலும் கர்ப்பிணிகள், பாலூட் டும் தாய்மார்கள், குழந்தைகள், சிறுநீர்ப் பையில் பிரச்சினை உள்ளவர்கள், நீரிழிவு நோயாளர்கள் எனப் பல ருக்கும் இது உகந்தது. இந்த முள்ளங்கி யில் வெள்ளை, சிவப்பு என இரண்டு வகைகள் இருந்தாலும் வெள்ளை முள்ளங்கி மட்டுமே மருத்துவ குணம் வாய்ந்தது, சிவப்பு முள்ளங்கி சுவைக் காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

வெள்ளை முள்ளங்கியைப் பால்கறி ஆக்கி உண்ணும் பழக்கம் அதிகம் இருந்தாலும் அதை எப்படிச் சுவைபட வறுத்துண்பது என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

முள்ளங்கியை வறையாக்கிக் கொள்வதற்கு கால் கிலோ முள்ளங்கிக் கிழங்குகளை வாங்கிக் கொள்ளுங்கள். இதனுடன் பாதித் தேங்காயிலும் அரைவாசியளவுக்குத் துருவி எடுத்த தேங்காய்ப்பூ, சின்னவெங்காயம் 50 கிராம், 6 செத்தல் மிளகாய்கள், பெருஞ் சீரகம், மிளகு தூள் ஆகியன தேக்கரண்டியளவில், 20 கிராம் மிளகாய்த்தூள் கடுகு, கறிவேப்பிலை, உப்பு, எண் ணெய் ஆகியவற்றைத் தேவையான அளவில் எடுத்துக் கொள்ளுங்கள்.

**எப்படி வறுப்பது...?**

முள்ளங்கிக் கிழங்குகளின் தோலைச் சீவி, அவற்றின் இலைகளை நீக்கிச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். பின்னர் கரட் சீவுவதற்கு நீங்கள் பயன்படுத்தும் தட்டில் முள்ளங்கிக் கிழங்குகளைச் சீவி உப்பு, மிளகுதூள், மிளகாய்ள்த் தூள் ஆகின தூவிப் பிரட்டி வையுங்கள். வறை வறுப்பதற்குரிய சட்டியை அடுப்பில் வைத்து அதற்குள் எண்ணெய்யை விட்டு நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தையும், செத்தல் மிளகாய்களையும் கூடவே பெருஞ்சீரகம், கடுகு, கறிவேப்பிலையையும் போட் டுத் தாளியுங்கள். பின்னர் பிரட்டி வைத்துள்ள முள்ளங்கியைப் போட்டு வறுத்துக் கொள்ளுங்கள். நன்கு வறுவலாகியதும் தேங்காய்ப்பூவைப் போட்டு வறுங்கள். பச்சை வாசனை போகும் வரை வறுத்துப் பின் இறக்குங்கள். இப்போது ருசியான முள்ளங்கி வறை தயார்.

வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.



- ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
- வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

077 652 9583

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிறை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org